1350/2

# தொழிற் சங்கம்

இரண்டாம் பாகம்

ஏ.எஸ்.கே.

# தொழிற்சங்கம்

CONNEMARA PUBLIC LIBRARY
22 APR 1976
MADRAS

## கொள்கை - நடைமுறை
## தொழிலாளர் - கடமை

TOLIRCANKAM
Pt. 2
349

இரண்டாம் பாகம்

by
Ē ES. KE, Pseud (i.e. E
KIRUSNAN

ஏ. எஸ். கே.
எழுதியது

வெளியிடுவோர் ;
பகத் ஹவுஸ் பப்ளிகேஷன்ஸ்
பகத் ஹவுஸ்
1/73, பிராட்வே, சென்னை-600001.

முதல் வெளியீடு: பிப்ரவரி 1975

*All Rights Reserved by the Autho*

**விலை ரூ. 1-75**

அச்சிட்டோர்:
குரு பிரிண்டர்ஸ்
38, ஆச்சாரப்பன் தெரு,
சென்னை-600001.

இந்திய தொழிலாளி வர்க்கத்தின்
ஒப்பற்ற ஆசான்

PUBLIC
22 APR 1976
MADRAS



தோழர் எஸ். ஏ. டாங்கே
அவர்களுக்கு
சமர்ப்பணம்



எஸ். ஏ. டாங்கே & ஏ. எஸ். கே.

22 APR 1976
MADRAS

## இரண்டாம் பாகத்திற்கு

# என்னுரை

"தொழிற்சங்கம்" முதல் பதிப்பு 1974 மார்ச்சு 4ம் தேதியன்று வெளியிடப்பட்டு, ஒரே மாதத்தில் 3000 பிரதிகளும் விற்கப்பட்டு விட்டதால் இரண்டாம் பதிப்பு அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முதல் பதிப்பு வெளியீட்டு விழாவினை தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. கே. இராசாராம் அவர்கள் வருகை தந்து சிறப்பித்து, நூலை வெளியிட்டார்கள். வெளியீட்டு உரையில் அமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான கருத்தினை தெளிவாகக் கூறினார்கள். அதாவது இந்நூலில் தமிழகத்தின் தொழிற்சங்க வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடாதது ஒரு குறைபாடு என்பதேயாகும்.

ஆகவே, அன்றைக்கே இக் குறைபாட்டைப் போக்குவது எப்படி என்று சிந்திக்கத் தொடங்கினேன். இரண்டாம் பதிப்பு வெளியிட சந்தர்ப்பம் ஏற்பட்டால் இக் குறையைப் போக்க வேண்டும் என்று முடிவுக் கட்டிக் கொண்டேன். இக் கருத்து, அந் நூலின் வேறு குறைபாடுகளைப் பற்றி சிந்திக்கச் செய்தது. முதல் பதிப்பு மிக விரைவில் ஓடவே, இரண்டாம் பதிப்பில் சேர்க்க வேண்டியவைகளை உடனே எழுதத் தொடங்கினேன். இரண்டாம் பதிப்பில் அமைச்சர் அவர்கள் கூறிய குறைபாடும், என் சிந்தனைக்குப்பட்ட பல குறைபாடுகளும், தீர்க்க முயற்சித்துள்ளேன். ஆனால் இரண்டாம் பதிப்பு விரிவு படுத்தப் பட்டதாக அச்சிட வேண்டுமாயின் இன்று காகிதம், அச்சுக்கூலி முதலியவை தடங்கலாக இருப்பதால், இந்த புதிய அத்தியாயங்களை தனியாக இரண்டாம் பாகமாக வெளியிடப் படுகிறது.

''எனவே, இந்தியா—அன்றும், இன்றும்,'' என்ற தலைப்புடன் முதல் அத்தியாயம் இந்நூலில் அமைந்துள்ளது. இந்த அத்தியாயத்தில் சுருக்கமாக இரு சரித்திரங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. அந்நியர் வெள்ளையர் ஆட்சியின் கீழ் இந்திய மக்கள் எவ்வாறிருந்தார்கள் என்பதும், நாடு சுதந்திரம் பெற்றப்பின் எவ்வாறு திகழ்கிறார்கள், எப்படி மாநிலங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ளன, அவைகளின் நிலப்பரப்பு. ஜனத்தொகை, மாநிலச் சட்டசபைகள், அரசியல் சட்டம் முதலியவற்றைப் பார்க்கலாம்.

அடுத்த அதிகாரத்தில், ''ஐந்தாண்டு திட்டங்களும், பொதுதுறையும்'' என்ற தலைப்பில் சிலபல முக்கிய விஷயங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

மூன்றும் அதிகாரத்தில். ''தொழிற் சங்கம்—அன்றும், இன்றும்'', என்ற தலைப்பில் சுதந்திரத்திற்கு முன் இருந்த நிலையும், அதற்குப் பின்னர், தொழிற் சங்க வளர்ச்சியும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

நான்காம் அதிகாரத்தில் அமைச்சர் அவர்கள் சுட்டிக் காண்பித்த குறைபாட்டை நீக்க முயற்சி செய்துள்ளேன். இதில் சுருக்கமாக ''தமிழகத்தில் தொழிற் சங்கம்'' என்ற தலைப்பில் சில பல விஷயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இந்த நான்கு அதிகாரங்களுக்குப் பிறகு, ''தொழிலாளர் கல்வித் திட்டம்'' என்பதும், இடம் பெற்றுள்ளது.

அனுபந்தங்களில் ''சீரமைப்பு (Rationalisation) என்றால் என்ன?''

''ஆடோமேஷன் (Automation) என்றால் என்ன?''

''தொழில் தகராறுகள் சட்டம் என்ன?'' என்பன சேர்க்கப்பட்டுள்ளன.

முக்கியமாக, இந்நூலின் இறுதியில் ஒரு சில குறள்களைச் சேர்த்துள்ளேன்; குறள் அனைத்தும் அழியாச் செல்வம் என்ப

தில் ஐயமில்லை. எனினும் குறைந்த பட்சம் இங்கு தந்துள்ள குறள்களையாவது தொழிலாளி வர்க்கம் பின்பற்ற வேண்டும் என்பது என் அவா.

எனவே, இந்த இரண்டாம் பாகம் பலவகையில் பயன் படும் என்று கருதுகிறேன்.

இறுதியாக, இந்தப் பதிப்பும், ஏற்கனவே முதல் பதிப் புடன் சேர்த்து அச்சிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால், காகிதம், மை, அட்டை, அச்சுக்கூலி முதலிய அனைத்தின் விலைகளும் எல்லாப் பொருள்கள் போலவே விஷம் போல் ஏறி விட்டன. ஆகவே இரண்டாம் பதிப்பு என்பதற்கு பதிலாக இரண்டாம் பாகம் மட்டும் வெளியிடப்படுகிறது.

இந்திய தொழிலாளி வர்க்கத்தின் ஆசானாகிய தோழர் எஸ். ஏ. டாங்கே அவர்களுக்கு, இந்த இரண்டாம் பாகத்தை யும் என் காணிக்கையாக சமர்ப்பணம் செய்கிறேன்.

பகத் ஹவுஸ்
17-2-1975

ஏ. எஸ். கே.

# பொருள் அடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தியா—அன்றும், இன்றும் | 1 |
| 2. | ஐந்தாண்டு திட்டங்களும்—பொதுத் துறையும் | 8 |
| 3. | தொழிற்சங்கம்—அன்றும், இன்றும் | 17 |
| 4. | தமிழகத்தில் தொழிற் சங்கம் | 20 |
| 5. | தொழிலாளர் கல்வி திட்டம் | 24 |


## அனுபந்தங்கள்


| | | |
|---|---|---|
| 1. | சீரமைப்பு (Rotionalisation) என்றால் என்ன? | 26 |
| 2. | ஆட்டோமேஷன் (Automation) என்றால் என்ன? | 27 |
| 3. | தொழில் தகராறுகள் சட்டம் என்பது என்ன? | 28 |
| 4. | திருக்குறள் காட்டும் நல்வழி | 29 |
| 5. | மாநிலங்களுக்குரிய ராஜ்ய சபை லோக சபை ஸ்தானங்கள் | 34 |
| 6. | மாநிலங்களின் சட்டசபை—மேல்சபை | 36 |
| 7. | பொதுத்துறை நிறுவனங்கள் | 37 |
| 8. | இந்தியாவிலுள்ள நகரங்கள் etc., | 39 |
| 9. | செட்யூல் வகுப்பு—மலைவாசிகள் விவரம் | 40 |
| 10. | வேலையில் உள்ளவர்—இல்லாதவர் புள்ளிகள் | 42 |
| 11. | இந்தியாவில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் | 44 |
| 12. | குறள்பாணியில் ஏ.எஸ்.கே. எழுதியவை | 46 |

# இந்தியா அன்றும்—இன்றும்

1947 ஆகஸ்டு 15-ம் தேதி இந்தியா சுதந்திரம் பெற்ற நாடாகத் திகழத் தொடங்கியது. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சி நம் நாட்டை அடிமைத்தனத்தில் ஆழ்த்தி சொல்லொண்ணு இன்னல்களுக்கு இறையாக்கியது.

விடுதலை இயக்கம் இறுதியில் வெற்றி பெற்று, நாடு சுதந்திரம் அடைந்தது என்றல் எண்ணற்ற தியாகமும், பொது மக்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும் அரசியல் உணர்வுடன் இயங்கி விடுதலை இயக்கத்தில் பங்காற்றியதுமே யாகும்.

அன்று பிரிட்டிஷ் வெள்ளையன் ஆட்சி நீடித்து நிற்க, தேவையான அரசியல் அமைப்பு எதுவோ அதைத்தான் அமைத்திருந்தனர்.

550-க்கு மேல் முடிசூட்டிய மன்னர்கள் பிரதேசங்கள் இந்தியாவில் இருந்தன. இம்மன்னர்கள் அனைவரும் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் தூண்களாக விளங்கினர்.

நேரடியாக பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின்கீழ், மதராஸ், பம்பாய் ஐக்கிய மாகாணங்கள், பீஹார் மத்திய மாகாணங்கள், ஒரிஸா, பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து வங்காளம், அசாம் மாகாணங்கள் இருந்தன.

நாடு சுதந்திரம் அடைந்ததும் இவை அனைத்தும் முற்றிலும் மாற்றப்பட்டன. இம்மாற்றங்கள் காலப் போக்கில் தான் ஏற்பட்டதே ஒழிய திடீர் என்று ஏற்படவில்லை.

இன்றுள்ள நிலைமையை எடுத்துக் கொண்டால் முடி சூட்டிய மன்னராட்சியின் பிரதேசம் என்று இந்தியாவில் எதுவும் இல்லை.

இன்று ஒன்றுபட்ட இந்தியா, ஏற்பட்டுள்ளது. ஆனால் வெள்ளையர் ஆட்சி முடிவு வந்த காலத்தில் இந்தியா, மூன்று துண்டாக்கப்பட்டு, இந்தியா என்றும், மேற்கு பாகிஸ்தான் கிழக்கு பாகிஸ்தான் என்றும் ஏற்படுத்திவிட்டு வெள்ளையர் வெளி ஏறினர். இவ்வாறு ஏற்படுவதற்குமுன்,

இந்திய உபகண்டத்தின் நிலப்பரப்பு 15,81,410 சதுர மைல் இமயமலையிலிருந்து கன்னியாக்குமரி வரை 2000 மைல்.

கிழக்கிலிருந்து மேற்கு எல்லை 2,500 மைல் ஓட்டு மொத்தம் நில எல்லை 4,600 மைல். சமுத்திரக் கரையோரம் 4,800 மைல் இது அன்று.

ஆனால் இன்றைய இந்திய உபகண்டமோ, 32, 80, 483 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்புக் கொண்டது.

இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரை 3,214 கிலோ மீட்டர் கிழக்கிலிருந்து மேற்குப்பகுதி, 2,933 கிலோ மீட்டர் கொண்டது. இந்திய நில எல்லை 15,200 கிலோ மீட்டர் கொண்டதாகவும், சமுத்திரக்கரை 6,083 கிலோ மீட்டர் கொண்டதாகவும் உள்ளன.

நாடு சுதந்திரம் அடையும் தருவாயில் "அரசியல் நிர்ணய சபை" 1946 டிசம்பர் 9-ம் தேதி கூடிற்று. பாபு ராஜேந்திரப் பிரசாத் இச்சபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1947 ஆகஸ்டு 15-ம் தேதி வெள்ளையர் அதிகாரத்தை விட்டு வெளியேறினர். இந்தியா சுதந்திர நாடாயிற்று.

அரசியல் நிர்ணய பசை சுதந்திர இந்தியாவின் "அரசியல் சட்டத்தை" தீட்டியது. இந்திய அரசியல் சட்டம் 1950 ஜனவரி 26-ம் தேதி அமுலுக்கு வந்தது. இந்தியா மேலாதி பத்தியம் அடங்கிய ஜனநாயக குடிஅரசு நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

அரசியல் சட்டத்தில் முக்கியமானது "அறநெறிமுறைக் கொள்கை" பகுதியேயாகும்.

**"மக்கள் நல்வாழ்வடைய சமுதாய அமைப்பை ஏற் படுத்துவது அரசின் கடமை"**

நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக உள்ள எல்லா நிறுவ னங்களிலும், நீதி, சமுதாய, பொருளாதார அரசியல் நல் வாழ்விற்கு உரியதனைத்தும் ஏற்பட சமுதாய அமைப்பை சமைக்கப் பாடுபடும்.

## அரசு கையாள வேண்டிய சில கொள்கைகள்:

கீழ்க்கண்டவைகளை உத்தரவாதம் செய்யும் முறையில் தன் நடைமுறை திட்டத்தை அரசு வகுத்துக் கொள்ளும்:

(அ) ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக எல்லாப் பிரஜைகளுக்கும் வாழ்க்கைக்கு உத்தரவாதம் பெற உரிமை யுண்டு (ஆ) மக்களின் பொது நலனுக்குப் பயன்படும் முறையில் நாட்டின் இயற்கை வளம் அனைத்தின் உடைமையும், அவைகளை விநியோகம் செய்வதும் உத்தரவாதமாக்கப்படும் (இ) உற்பத்தி சாதனங்களையும் செல்வத்தையும் சிலர் கைகளில் குவித்து பொதுமக்கள் பாதிக்கப்படுத்தும் பொரு ளாதார அமைப்பு தடுத்து நிறுத்தப்படும் (ஈ) ஆண், பெண் வித்தியாசமின்றி வேலைக்குத் தகுந்த கூலி அளிக்கப்படும் (உ) ஆண், பெண், இளம் குழந்தைகள் தேக நலனையோ, சக்தியையோ, கணக்கிலெடுக்காமல், பொருளாதார நிலை யினால், அவர்கள் சக்திக்கும், வயதிற்கும் ஒவ்வாத வேலை களுக்கு ஈடுபடுத்தப்படுவது தடுத்து நிறுத்தப்படும். (ஊ) பொருளாதார, ஒழுக்க சுரண்டல்களுக்கு குழந்தைகளும், வாலிபர்களும் இரையாக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படும்.

இவ்வாறு அரசியல் சட்டம் உத்தரவாதம் அளிப்பதுடன் கிராம பஞ்சாயத்துகளை நிறுவி சுயாட்சியின் அடித்தளமாக்கப் படும் என்றும் கூறுகிறது.

இவை மட்டுமின்றி, வேலைக்கும் கல்விக்கும் உத்தரவாத வளிக்கின்றது.

குறிப்பாகத் தொழிலாளர்களைப்பற்றி அரசியல் சட்டத்தில் "அரசின் நெறிமுறை கொள்கை" என்று கூறப்படுவது பின்வருமாறு கூறுகிறது:

43. Living Wage etc. for workers — The State shall endeavour to secure by suitable legislation or economic organization or in any other way, to all workers, agricultural, industrial or otherwise, work, a living wage, conditions of work ensuring a decent standard of life and full enjoyment of leisure and social and cultural opportunities and in particular, the State shall endeavour to promote cottage industries on an industrial or co-operative basis in rural areas.

**இதன் தமிழாக்கம்:**

## 43 தொழிலாளர்கள் வாழ்க்கைக் கூலி முதலியன

விவசாயம் தொழில் நிறுவனம் இந்தியத் தொழிலாளர்களுக்கு வேலையும் வாழ்க்கைக் கூலியும், கவுரவுமான வாழ்க்கை அந்தஸ்தையும், ஓய்வு நேரத்தையும், சமுதாய சந்தர்ப்பங்களையும், கலையையும், பயன்படுத்தக்கூடிய முறையில் வேலை வாய்ப்புகளை தேவையான சட்ட மூலமாகவோ, அல்லது பொருளாதார அமைப்பு மூலமாகவோ, அல்லது வேறு எந்த முறையிலோ பெற முயற்சிகள் எடுக்கும். குறிப்பாக குடிசைத் தொழில்களை தனிப்பட்ட முறையிலோ கிராமப்புரங்களில் அமைக்க முயற்சிக்கும்.

அதோடு 46-வது விதி கூறுவதாவது:

**46. Promotion of educational and economic interests of scheduled Casts, Scheduled Tribes, and other weaker section.**

The State shall promote with special care the educational and economic interests of the weaker sections of the people, and, in particular, of the scheduled casts and the scheduled Tribes and shall protect them from social injustice and all forms of exploitation.

**இதன் தமிழாக்கம் :**

46. செட்யூல் வகுப்பினர், செட்யூல் டிரைபு, மற்றும் ஏனைய பலவீனப்பட்ட பகுதி மக்களின் கல்வி, பொருளாதார நலன்களை வளர்ப்பது.

பலவீனப்பட்ட பகுதி மக்களின் குறிப்பாக செட்யூல் வகுப்பினர் செட்யூல் டிரைபினர் கல்வி, பொருளாதார நலன்களை கவனித்து அவைகளை வளர்க்க அரசு பிரத்யேக கவலையுடன் செயல்படும்.

இதேபோல், அரசியல் சட்டத்தில் பிரஜா உரிமைகளும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளன.

மதம், இனம், ஜாதி, ஆண், பெண், என்ற வித்தியாசம் பிறந்த இடம் போன்றவையின் காரணமாக எவ்வித பாகுபாடும் அரசு செய்யாது. இதே நிபந்தனையும், வேலை வாய்ப்பு விஷயத்தில் அனுஷ்டிக்கப்படும். எல்லாவித சுரண்டலும் ஒழிக்கப்படும். இத்தியாதி,

இவ்வரசியல் சட்டப்படி ஒவ்வொரு ராஜ்யத்திலும், மாகாணத்திலும், ஒரு சட்டசபை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும். சில ராஜ்ஜியங்களில் மேல் சபை ஏற்படுத்தப்படும். இந்திய அரசு ஜனாதிபதி, உப ஜனாதிபதி, நாடாளுமன்றம் ராஜ்யசபை, அமைச்சரவைகளைக் கொண்டிருக்கும். நாடாளுமன்றம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படும்.

| மாநிலங்களின் பெயர் | நிலப்பரப்பு சதுர கிலோ மீட்டர் | ஜனத்தொகை |
|---|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | 2,76,814 | 4,35,02,708 |
| அஸாம் | 78,523 | 1,46,25,152 |
| பீஹார் | 1,73,876 | 5,63,53,369 |
| குஜராத்து | 1,95,984 | 2,66,97,475 |
| ஹரியாணா | 442,22 | 1,00,36,808 |

| மாநிலங்களின் பெயர் | நிலப்பரப்பு சதுர கிலோ மீட்டர் | ஜனத்தொகை |
|---|---|---|
| ஹிமாசலப் பிரதேசம் | 55,673 | 34,60,474 |
| ஜம்மு, காஷ்மீர் | 2,22,236 | 46,16,632 |
| கேரளா | 38,864 | 2,13,47,375 |
| மத்திய பிரதேசம் | 4,42,841 | 4,16,54,119 |
| மஹாராஷ்டிரம் | 3,07,762 | 5,04,12,235 |
| மணிப்பூர் | 22,356 | 10,72,753 |
| மெகாலயா | 22,489 | 10,11,699 |
| மைசூர் (கர்னடகா) | 1,91,773 | 2,92,99,014 |
| நாகாலாண்டு | 16,527 | 5,16,449 |
| ஒரிஸா | 1,55,842 | 2 19,44,615 |
| பஞ்சாப்பு | 50,362 | 1,35,51,060 |
| ராஜஸ்தானம் | 3,42,214 | 2,57,65,806 |
| தமிழ்நாடு | 1,30,069 | 4,11,99,168 |
| திருபுரா | 10,477 | 15,56,342 |
| உத்திர பிரதேசம் | 2,94,413 | 8,83,41,144 |
| மேற்கு வங்காளம் | 87,853 | 4.43,12,011 |
| யூனியன் பிரதேசங்கள் | | |
| அந்தமான், நிகோபார் தீவுகள் | 8,293 | 1,15 133 |
| அருணசல பிரதேசம் | 83,578 | 4,67 511 |
| சாந்திகட் | 114 | 2,57,251 |
| தாத்ரா, நாகர்ஹவேலி | 491 | 74,170 |
| டெல்லி | 1,485 | 40,65,698 |
| கோவா-தாமன், தையூ | 3,813 | 8,57,771 |
| L. M. & A. தீவுகள் | 32 | 31,810 |
| மிஜோரம் | 21,087 | 3,32,390 |
| பாண்டிச்சேரி | 480 | 4,71,707 |
| இந்தியா | 32,80,483 | 54,79,49,809 |

நாடு சுதந்திரமடைந்து விட்டது. நமது மக்களின் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது.

மகாகவி பாரதியாரின் பாடலை, பட்டித் தொட்டிகளி லெல்லாம் மக்கள் பாடத் தொடங்கினர்.

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே ;
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று (ஆடு)

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே—நம்மை
ஏற்ப்போருக்கேவல் செய்யும் காலமும் போச்சே. (ஆடு)

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு —நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்து ஓதுவோமே. (ஆடு)

எல்லோரும் ஒன்றென்னும், காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே. (ஆடு)

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம். (ஆடு)

நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை செய்து வாழ்வோம். (ஆடு)

# ஐந்தாண்டு திட்டங்களும் பொதுத் துறையும்

ஏகாதிபத்திய காலனி அடிமை நாட்டுப் பொருளாதாரத்தை முற்றிலும் மாற்றுஞலொழிய, நாடு முன்னேற்றம் அடைய இயலாது என்ற உண்மையை நம் நாட்டுத் தலைவர்கள் நன்கு உணர்ந்தனர்.

லெனின் தலைமையில் ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்று, சோவியத் அரசு ஏற்பட்டபோது, அவ்வரசை என்ன பிரச்னைகள் எதிர் நோக்கினவோ, அதே பிரச்சனைகள் சுதந்திர இந்தியாவையும் எதிர்நோக்குகின்றன என்பதை நம் நாட்டுத் தலைவர்கள் உணர்ந்தனர்.

சோவியத் அரசு பொருளாதார அமைப்பை தலைகுப்புரக் கவிழ்த்து புதியதோர், சமுதாய அமைப்பை ஏற்படுத்த ஐந்தாண்டு திட்டங்களைத் தீட்டியது. இவைகளின் அமைந்தது.

ஆகவே அதேபோல், நாமும் ஐந்தாண்டு திட்டங்களைத் தீட்டி, செயல்பட்டால் நாடு செழித்தோங்கி வளரும் என்ற எண்ணம் நம் நாட்டுத் தலைவர்களுக்கு ஏற்பட்டது.

முதல் ஐந்தாண்டு திட்டம் (1951—1956) திட்டத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது.

> "மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்கள் வாழ்வாங்கு வாழ சந்தர்ப்பங்களையும், சூழ்நிலையையும், ஏற்படுத்தும் நோக்கத்துடன், இந்தியாவில் மத்திய திட்டம், தீட்டப்படுகிறது."

இந்த நோக்கம் நிறைவேற பொதுத்துறையை விரிவு படுத்தவேண்டும், என்றும் ஏற்கனவே, 'ரயில், நீர்ப்பாசன வசதிகள், தபால், தந்தி, மின்சாரம், துறைமுகங்கள் இந்தியத் தொழில்களில் அரசு ரூ, 1,200 கோடி மூலதனம் போட்டிருக்கிறது என்றும் தனியார் துறையில் பல தொழில் களில் ரூ. 1.500 கோடி மூலதனம் போடப்பட்டுள்ளது என்றும், நாடுவளர, நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ பொதுத் துரை வளர்க்கப்பட வேண்டும். தனியார் துறையின் பிடிப்பு தளர்த்தப்பட வேண்டும் என்று முதல் ஐந்தாண்டு திட்டம் ஆணித்தரமாகக் கூறுகிறது.

இதை அடைய ரூ 2,356 கோடி மூலதனம் பொதுத் துறையை விரிவுபடுத்த செலவு செய்ய முடிவு செய்தது. பிரதானமாக விவசாய வளர்ச்சி முதல் ஐந்தாண்டு திட்டம் (1956—1961) தொழில் வளர்ச்சியைப் பிரதானப்படுத்தியது. இந்த ஐந்தாண்டு திட்டத்தில் சோஷலிஸ்டு சமுதாய அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கம் வலியுறுத்தப் படுகிறது. நாடு தொழில் மயமாக்கப்பட வேண்டுமாயின் அடிப்படை கன இயந்திரத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்று இத்திட்டம் கூறுகிறது. குறிப்பாக தொழி லாளர்களைப்பற்றியும், தொழில் நோக்கத்தைப்பற்றியும் இத் திட்டம் திட்டவட்டமாகக் கூறுகிறது.

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் ரூ 4,800 கோடி செலவு செய்வது என்று முடிவு செய்தது.

மூன்றும் ஐந்தாண்டு திட்டம் (1961—1966) கீழ்க்கண்ட வைகளையும் பிரதான நோக்காகக் கொண்டது.

(1) தேசீய வருமானத்தை வருடாந்திரம் ஐந்து சத விகிதம் உயர்த்துவது;

(2) உணவு தான்ய உற்பத்தி; சுயத் தேவையை பூர்த்தி செய்யும் மட்டத்திற்கு உயர்த்துவது;

(3) எஃகு எண்ணை, மின்சாரம் போன்ற அடிப்படை தொழில்களை விரிவுபடுத்துவதும் இயந்திரம்-உற்பத்தி செய்யும் தொழில்களை நிறுவி அடுத்த சுமார் 10 ஆண்டுகளில்

பிரதானமாக நாட்டின் உற்பத்தி மூலமாக மேலும் தொழில்களை நிறுவச் செய்வது ;

(4) நாட்டின் மனித பலத்தை முடிந்த வரையில் முற்றிலும் பயன்படுத்துவதும், வேலை வாய்ப்புகளை அதிகப் படுத்துவது ;

(5) வருவாயிலும், சொத்து பத்திலும் மக்களுக்கு இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைத்து, பொருளாதார சக்தியை பகுந்துக் கொடுப்பது.

முதல் இரண்டு திட்டங்களில் விவசாயம் பிரதானமாக சீரமைக்கப்பட்டது. நாட்டின் தொழில் இயலை மேலும் வளர்க்க எஃகு எண்ணை, மின்சாரம், முதலியன கேந்திரமா வுள்ளன, இதன் மீது மூன்றும் ஐந்தாண்டு திட்டமும், அதன் வெற்றியும் ஆதாரப்பட்டுள்ளன, என்று அடித்திட்டம் கூறுகிறது.

இத்திட்டத்திற்காக பொதுத் துறையில் ரூ. 6,200 கோடியும் தனியார் துறையில் ரூ. 4000 கோடியும், ஆக மொத்தம் ரூ. 10,200 கோடி செலவு செய்வது என்று திட்டம் கூறுகிறது.

நான்காவது ஐந்தாண்டு திட்டம் (1966—1971) பொதுத் துறை வளர்ச்சிக்கு 16 000 கோடி என்றும் தனியார்த்துறை வளர்ச்சிக்கு ரூ. 7.750 கோடி என்றும், ஆகமொத்தம் ரூ. 23,750 கோடி ஒதுக்குவது என்று கூறுகிறது.

நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின், பிரதான நோக் கங்கள் பின்வருமாறு :

1) சுயதேவை பூர்த்தி செய்வது;

2) விவசாய குடிமக்கள் வருவாயைப் பெருக்குவது;

3) விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது;

4) உரம், பூச்சி மருந்துகள், விவசாய சாதனங்கள், பம்பு செட்டுகள், டிராக்டர்கள் முதலியவற்றுக்கு உற்பத் தியில் முதல் இடம் அளிப்பது;

5) ஜவுளி, சர்க்கரை, மண் எண்ணெ, காகிதம், மருந்து முதலியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவது;

6) உலோகங்கள், மெஷின்கள், ரசாயனம், சுரங்கம், மின் சாரம், போக்குவரத்து முதலியவற்றின் வளர்ச்சிக்கு ஆவன செய்து, சுய தேவையை பூர்த்தி செய்ய உத்தரவாதம் செய்வது.

7) குடும்பக் கட்டுப்பாட்டை விரிவுபடுத்தி, ஜனத் தொகை பெருகுவதை கட்டுப்படுத்துவது ;

8) சமூகநல திட்டங்களை அமுலாக்குவது.

குறிப்பாக நான்காவது ஐந்தாண்டு திட்டம், சுயதேவை பூர்த்தி செய்யும் திட்டமாக வரையறுக்கப்பட்டது.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் [1974-1979] கொள்கை ரீதியாக 1974 ஏப்ரல் முதல் தேதியன்று துவக்கப்பட்டது.

| ஐந்தாண்டு திட்டம் | காலம் | ரூபாய்-கோடி பண ஒதுக்கீடு | ரூபாய்-கோடி செலவழித்த பணம் |
|---|---|---|---|
| முதலாவது | 1951 1956 | 2,356 | 3,760 |
| இரண்டாவது | 1956 - 1961 | 4,800 | 7,772 |
| மூன்றாவது | 1961 - 1966 | 10,200 | 12,767 |
| நான்காவது | 1966—1971 | 23,750 | |
| ஐந்தாவது | 1974—1979 | 53,411 | |

1974 மார்ச்சு 31-ம் தேதியுடன் 4-வது ஐந்தாண்டு திட்டம் முடிவதால் இந்த புள்ளிகள் கிடைக்கவில்லை.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரதான நோக்கம் வறுமையை அகற்றவும், அத்தியாவசியமான குறைந்தபட்ச தேவைகளை எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்யவும், அதிக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், அரசு பாடுபடும் என்று கூறப்படுகிறது

அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும் புள்ளிப்படி 22 கோடி மக்கள் அரைகுறை பட்டினியாக வாடுகிறார்கள்.

இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளன : குழந்தைகள் 14 வயது அடையும்வரை ஆரம்பக் கல்வி பெற வேண்டும் குறைந்தபட்ச சுகாதார வசதிகள் உத்தரவாதம் செய்வதுடன் குழைந்தைகளுக்கு சத்துள்ள உணவு அளிப்பதும், அதே சமயத்தில் குடும்பக் கட்டுப்பாட்டை விரிவு படுத்துவதும், கிராமப்புறங்களுக்கு தண்ணீர் வசதிகளை உத்தரவாதம் செய்வது, நிலமற்ற ஏழைகளுக்கு மனைகளை உத்தரவாதம் செய்வதும், கிராமப்புறங்களில் சாலை வசதி செய்வதும், கிராமங்களுக்கு மின்சாரம் எடுத்து செல்லுவதும், நகரங்களில் சேரி ஒழிப்பு திட்டங்களை அமுல்படுத்துவதுமே யாகும்.

வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டத்திற்கு ரூ. 3,600 கோடியிலிருந்து ரூ. 3,900 கோடி நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கென செலவு செய்யப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் மேற்கூறிய தொகையை இரட்டிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் சுயதேவை பூர்த்தி செய்வதை உறுதிபடுத்த ஆவன செய்யும்.

வெள்ளையர் ஆட்சியில் தொழில் இயல் வளர்ச்சி நூறு ஆண்டில் எவ்வளவு ஏற்பட்டதோ அதைவிட பன் மடங்கு தொழில் வளர்ச்சி சுதந்திரம் பெற்ற இருபது ஆண்டுகளில் நம் நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இவ்வளர்ச்சியில், பொதுத்துறை வளர்ச்சி மிக முக்கியமானதாகும். 1951-ம் ஆண்டில், ஐந்த பொதுத்துறை நிறுவனங்கள் மட்டுமேதான் இருந்தன. இவைகளின் மூலதனமோ ரூ 29 கோடியே. 1971 மார்ச்சு இறுதியில் 97 பொதுத்துறை நிறுவனங்களும், அவைகளின் மூலதனம் ரூ. 4,682 கோடியுமாக வளர்ந்தது. இந்நிறுவனங்களில் உற்பத்திச் செய்யப்படும் பண்டங்கள் நாட்டிற்கு மிகமிகத் தேவையானவைகளாகும்; எஃகு கண மின்சார, கணமில்லா மின்சாரப் பண்டங்கள், இரசாயணப் பொருள்களுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்கள், சுரங்கங்களும், சுரங்கப் பொருள்களும்,

பெட்ரோலியம் பொருள்கள், விமானங்கள், கப்பல்கள், இரயில் வண்டிகள் இந்தியா உற்பத்திகளேயாகும்.

பொதுத் துறை மட்டுமின்றி தனியார் துறையும் பெரிய அளவு வளர்ந்துள்ளது. மகாராஷ்டிரம். மேற்கு வங்கம், தமிழ்நாடு, குஜராத்து, பீஹார், உத்திரப் பிரதேசம் தொழிற் துறையில் மிகமிக வளர்ச்சிபெற்ற ராஜ்யங்களாகும். இந்திய உபகண்டத்திலுள்ள பாக்டரீகளில் 64 சதவிகிதமும், உற்பத்தி மூலதனம் 66 சதவிகிதமும், தொழிலாளர்கள் எண்ணிக்கையில் 70 சதவிகிதமும், உற்பத்தியில் 74 சதவிகிதமும், மூலப் பொருள்களை உற்பத்திப் பண்டமாக்குவதால் அவைகளின் மதிப்பு 75 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருப்பதும், மேற்கூறிய ராஜ்யங்களைச் சாரும். மிச்சமுள்ள ராஜ்யங்கள் பாக்கியுள்ள சதவிகிதங்களுக்குக் காரணமாகும்.

சுதந்திர இந்தியாவின் தொழிற் கொள்கை எவ்வாறு கலப்புப் பொருளாதார (mixed economy) மாக இருக்கும் என்பதனை 1948-ல் அரசு பிரகடனம் செய்தது. இந்த பிரகடனத்தை அனுபந்தத்தில் காணலாம் 1956 ஏப்ரல் 30-ம்தேதி இந்தியாவின் தேசியக் குறிக்கோள் சோஷலிஸ்டு சமுதாயத்தை அமைப்பது, என்பது பிரகடனம் செய்யப்பட்டது. இப்பிரகடனத்தின்படி தொழில்கள் "ஏ" வகுப்பு, "பீ" வகுப்பு என்று பிரிக்கப்பட்டன. 'ஏ' வகுப்பு தொழில்களுக்கு முழு பொறுப்பு அரசே ஆகும். "பீ" வகுப்புத் தொழில்கள் நாளடைவில் அரசுடைமையாக்கப்படும். ஆனால் தனித் துறையும், இவைகளில் பங்காற்றும்.

"ஏ" வகுப்புத் தொழில்கள், யுத்த தளவாடங்களும், வெடி மருந்து, குண்டுகள் போன்ற தற்காப்புப் பொருள்கள், அணு சக்தி; இரும்பு, எஃகு, இரும்பு எஃகு கன இயந்திரப் பொருள்கள், இரும்பு எஃகு உற்பத்தி செய்யும் இயந்திரங்களும், சுரங்கங்களும் இயந்திர உற்பத்தி ஸாதனங்களும் மற்றும் மத்திய அரசு பிரகடனம் செய்யும் அடிப்படைத் தொழில்கள், கனரக இயந்திரங்கள்; ஹைட்ராலிக் ஸ்டீம் டர்பைன்களும்; நிலக்கரியும், லிக்னைட்டும்; கனிப்பொருள்,

எண்ணெய்ப் பொருள், இரும்புக்கல், சுரங்கவேலை மாங்கனீஸ், குரோம், ஜிப்சம், கந்தகம், தங்கம், மாணிக்கம், முதலியவைகளின் சுரங்கவேலை, செம்பு, ஈயம், தொத்துநாகம் மாலிப்டினம்; உல்புராம் முதலியவற்றை சுரங்கங்களிலிருந்து எடுப்பதும், சுத்தம் செய்யும் வேலை; 1953-ம் ஆண்டு அணுசக்தி ஆர்டரில் உள்ள எல்லா கனிப் பொருள் வேலை; விமானம், விமானப் போக்குவரத்து வேலை; இரயில் போக்குவரத்து, கப்பல் கட்டுவது, டெலிபோன், டெலிபோன் கம்பிகள் உற்பத்தி, தந்தி, கம்பி இல்லாத் தந்தி, மின்சார உற்பத்தி, விநியோகம் முதலியன "பி" வகுப்புத் தொழில்கள்" பிரத்யேகமாக குறிப்பிடாத கனிப் பொருள்கள், அலுமினியம், செட்யூல் "ஏ"வில் இல்லாத இரும்பில்லாத கனிப் பொருள்கள், இயந்திரக் கருவிகள், பெர்ரோ அல்லாய் கருவி, எஃகு மருந்து வர்ணங்கள், ரசாயனத் தொழில்கள், உற்பத்தி சிந்தடிக் ரப்பர், ரோடு போக்குவரத்து, கடல் போக்குவரத்து.

பொதுத்துறை படிப்படியாக எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது, என்பதனை கீழே தந்துள்ள புள்ளிகள் தெளிவாக்குகின்றன:

| கால அட்டவணை | போடப்பட்ட மூலதனம் [கோடி ரூபாய்கள்] | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | ரூ. | |
| முதல் ஐந்தாண்டு திட்டத் துவக்கத்தில் | 29 | 5 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் | 81 | 21 |
| மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் | 953 | 48 |
| மூன்றும் ஐந்தாண்டு திட்ட இறுதியில் [1966 மார்ச்சு 31] | 2,415 | 74 |

| கால அட்டவணை | போடப்பட்ட மூலதனம் [கோடி ரூபாய்கள்] | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | ரூ: | |
| 1967 மார்ச்சு 31-ல் | 2,841 | 77 |
| 1968 மார்ச்சு 31-ல் | 3,333 | 83 |
| 1669 மார்ச்சு 31ல் | 3,902 | 85 |
| 1970 மார்ச்சு 31-ல் | 4,301 | 91 |
| 1971 மார்ச்சு 31-ல் | 4,682 | 97 |

பொதுத்துறை நிறுவனங்களின் பட்டியல் (பிரதானவை மட்டும்) அனுபந்தத்தில் காணலாம் :

பொதுத்துறை பரிணம வளர்ச்சிக்கு சோவியத் யூனியன் அளித்துவரும் உதவி மிகப்பெரிய பங்கை ஆற்றுகிறது என்பதில் ஐயமில்லே.

1955-ம் ஆண்டில் இந்திய-சோவியத் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன் விளைவாக பிலாய் எஃகு சாலே தோன்றிற்று. இதுப் பொதுத் துறையை பலப்படுத்த அஸ்திவாரமாக அமைந்தது. இதற்குப் பிறகுதான் பலபல பொதுத்துறை நிறுவனங்கள் ஏற்பட்டன. 1965க்குள் 40 க்கு மேல் பொதுத் துறை நிறுவனங்கள் சோவியத் உதவியுடன் ஏற்பட்டன.

ரான்சியில், கன இயந்திர உற்பத்தி சாலே நிறுவப்பட்டது. துர்க்காபூரில் நிலக்கரி சுரங்க இயந்திர சாலே ஏற்பட்டது. ஹரித்துவாரில் கன மின்சார நிலேயம் நிறுவப்பட்டது. கோடாவில் நுட்பக் கருவிகள் சாலே தோன்றிற்று

இவ்வாறு, இன்று எண்ணற்ற பொதுத்துறை நிறுவனங்கள் சோவியத் நிதி நிபுணர்கள் உதவிகளேக் கொண்டு ஏற்பட்டுள்ளது.

'எண்ணெய் இன்றைய உலகத்தில் தங்கத்தின் மதிப்பைக் கொண்டுள்ளது. சுதந்திரம் அடைந்த பிறகுதான் நம் நாட்டில் இந்த செல்வத்தை நாம் அடைய முடிந்தது.

1965 ஜனவரி 11-ம் நாள் இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கும், சோவியத் அரசுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் விளைவாக எண்ணைக் கிணறுகளைத் தோண்டுவதும், எண்ணையை சுத்தம் செய்வதும் இரண்டரக் கலந்து செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. குஜராத் எண்ணை சுத்திகரிப்பு ஆலை சோவியத் நிபுணர்களைக் கொண்டு மின்னல் வேகத்தில் நிறுவப்பட்டது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கங்களை பயன்படுத்தவே முடியாது, என்று ஏகாதிபத்தியவாதிகள் சாதித்து வந்தனர். இதற்கு நேர்மாறாக. அவைகளைப் பயன்படுத்த முடியும் என்பதை சோவியத் அரசு நடைமுறையில் எடுத்துக் காட்டுவது மட்டுமில்லாமல் நெய்வேலி பழுப்புக் கரியை பயன்படுத்தி மிகப் பெரியதோர் மின்சார உற்பத்தி நிலையத்தையும் சோவியத் நிபுணர்கள் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளனர்.

இவ்வாறு எண்ணற்ற துறைகளில் சோவியத் நிபுணர்கள் நமக்கு உதவி புரிந்து பொதுத்துறையை பலப்படுத்தியுள்ளனர். பொதுத்துறை வளர்ந்தது நாட்டின் பொருளாதாரத்தை ஏகபோக முதலாளிகளின் கைகளிலிருந்து மீட்க பகீரத முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# தொழிற் சங்கம் அன்றும் இன்றும்

பிரிட்டிஷ் வெள்ளையர் ஆட்சியில் இந்திய நாட்டில் எந்த அளவு தொழில்கள் ஏற்பட்டனவோ, இயல்பாகவே, அந்த அளவு தான் தொழிலாளி வர்க்கம் என்பது இருந்து வந்தது. முதல் உலக யுத்தம் 1914-1918க்கு முன்கூட தொழிலாளி வர்க்கம் பலப் போராட்டங்கள் நடத்தியுள்ளது. 1920-ம் ஆண்டில் இந்திய தொழிலாளி வர்க்கத்தின் தொழிற்சங்கங்களுக்குஅகில இந்திய ஸ்தாபனம் ஏற்பட்டது. அதுதான் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஏ.ஐ.டி.யூ.சி.) ஆகும்.

பிரிட்டிஷ் வெள்ளையர் ஆட்சி எதிர்ப்புக்கிடையே தொழிலாளர்கள் சங்கங்களை நிறுவிக் கொண்டுப் போராடினார்கள். பம்பாய், கல்கத்தா, கான்பூர், சென்னை போன்ற மாநகரங்களில் தொழிலாளர்கள் போராடியுள்ளனர். 1919-ம் ஆண்டு சர்வதேச தொழிற் ஸ்தாபனம் (International Labour Organisation) சுருங்கக் கூறினால் ஐ.எல்.ஓ. (ILO) என்பது ஏற்பட்டது. தொழிற் சங்கங்கள் நம் நாட்டில் மேலும் ஏற்பட இது உதவியது.

1926-ம் ஆண்டு தொழிற் சங்க சட்டம் (Trade Union Act) இயற்றப் பட்டது. தொழிற் சங்கங்கள் சட்டபூர்வமாக இயங்க, அதாவது, தொழிலாளர்கள் கூட்டமாகக் கூடலாம், தங்கள் ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற உரிமை சட்டபூர்வமாக அளிக்கப்பட்டது. அதுவரை அவர்கள் கூடுவதோ, ஸ்தாபன ரீதியாக இயங்குவதோ, சட்டபூர்வமாக அனுமதிக்கப்படவில்லை

கீழ்க்கண்ட அட்டவணை ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களும் தொழிலாளர்கள் எண்ணிக்கையும் கொடுக்கின்றது:

2

| வருடம் | ரெஜிஸ்டர் செய்த சங்க எண்ணிக்கை | சங்க அங்கத்தினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1928 | 29 | 1,06 000 |
| 1931 | 119 | 2,19,100 |
| 1935 | 213 | 2,84,900 |

நாடு சுதந்திரம் அடைந்தபின் தொழிற்சங்கங்களும், தொழிலாளர்கள் எண்ணிக்கையும், பெரியதோர் பரிணும வளர்ச்சியைப் பெற்றன. கீழ்க்கண்ட புள்ளிகள் இந்த உண்மையைத் தெளிவாக உணர்த்துகின்றன.

| வருடம் | ரெஜிஸ்டர் செய்த சங்க எண்ணிக்கை | சங்க அங்கத்தினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1927—28 | 29 | 1,01,000 |
| 1935—36 | 236 | 2,68,000 |
| 1947—48 | 2,766 | 16,63,000 |
| 1951—52 | 4,623 | 19,96,000 |
| 1955—56 | 8,095 | 22,75,000 |
| 1960—61 | 11,312 | 40,18,000 |
| 1963—64 | 11,984 | 39,77,000 |
| 1964—65 | 13,023 | 44,66 000 |
| 1966 | 14,370 | 48,69,000 |
| 1968 | 16,409 | 50,94,000 |
| 1969 | 17,719 | 37,90,000 |
| 1970 | 18,093 | 16,81,000 |

இந்த புள்ளி, உண்மையான நிலையை விளக்குகின்றன என்று கூறமுடியாது. சங்கங்கள் இருந்த போதிலும், பெருவாரியானத் தொழிலாளர்கள் சங்கத்தில் சேராமலிருக்கும் நிலையை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஏ.ஐ.டி.யூ.சி. மத்திய ஸ்தாபனமாக இருந்து வந்தது. ஆனால் இதிலிருந்து பிரிந்து போய் சிலர் ஒரு போட்டி மத்திய

ஸ்தாபனத்தை வெள்ளையர் ஆட்சி காலத்திலேயே ஏற்படுத்தினர். 1947-ல் ஐ.என்.டி.யூ.சி. ஏற்பட்டது.

சுதந்திர இந்தியாவில் பல ஐந்தாண்டு திட்டங்களின் விளைவாக தொழில்கள் தழைத்தோங்கி வளர்ந்தன. தொழிலாளர் எண்ணிக்கையும் வளர்ந்தது. அரசின் கொள்கையும் தொழிற்சங்கங்கள் வளர உதவியது. அன்றும் இன்றும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்தில், தொழிற்சங்க வளர்ச்சி பெரிய தோர் மட்டத்தை எட்டியுள்ளது என்றுதான் கூறவேண்டும்.

அகில இந்திய ரீதியில் தொழில் வாரியாக பல ஸ்தாபனங்கள் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்டுள்ளன. அன்று சில இருந்தன. இன்று ஏறத்தாழ எல்லாத் தொழில்களுக்கும் அகில இந்திய ஸ்தாபனங்கள் உள்ளன.

பஞ்சாலே, சிமெண்டு, இன்ஜினியரிங், எஃகு இரும்பு, தேயிலைத் தோட்டங்கள், சர்க்கரை, நிலக்கரி, எண்ணெய், சுத்தம் செய்யும், விநியோகம் செய்யும் தொழில், ரசாயனம், பாங்கு (வங்கி) இன்ஷூரன்ஸ், இரயில், தபால், தந்தி, டிபென்ஸ் ஸ்தாபனங்கள், போர்ட் அண்டு டாக் இத்தியாதியே யாகும்.

நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எண்ணிக்கை பெரிய அளவு இருப்பதாலும், கடவுள், நம்பிக்கை, மூடப்பழக்கவழக்கங்கள், தலைவிதி நம்பிக்கை, இவை அனைத்தும், தொழிலாளி வர்க்கத்தை கவ்விக் கொண்டு இருப்பதாலும், கடமை உணர்ச்சி, வர்க்க உணர்வு மிக, மிக கீழ்மட்டத்தில் உள்ளது. எனவே, தொழிற்சங்கம் தன் மூச்சு என்ற உணர்வு பெரிய அளவு இல்லாததால், தேவைப் பட்டபோது சங்கத்தில் சேருவது, தேவை முடிந்தபோது சங்க உணர்வே இல்லாதிருப்பது. சர்வ சாதாரணமாக உள்ளன.

ஆகவேதான், தன் சக்தியை தொழிலாளிவர்க்கம் உணராமலிருப்பதால், தொழிற்சங்கங்கள் எவ்வளவு பலமாக இன்று இருக்க வேண்டுமோ, அவ்வளவு பலமாக இல்லை என்று தான் கூற வேண்டும்.

# தமிழகத்தில் தொழிற் சங்கம்

1884-ம் ஆண்டில் பம்பாய் மாநகரில் திரு. என். எம். லோகாண்டே என்பவர் தலைமையில் பம்பாய் மாநகர பஞ்சாலைத் தொழிலாளர் அசோசியேஷன் என்பது ஏற்பட்ட போதிலும், தொடர்ச்சியாக பல முக்கிய நகரங்களில் பல் வேறு வேலை நிறுத்தங்கள் நடைபெற்ற போதிலும், 1908-ம் ஆண்டு பம்பாய் மாநகர பஞ்சாலைத் தொழிலாளர்கள் தேச பக்தர் லோகமானியா திலகர் தண்டனையை எதிர்த்து அரசியல் வேலை நிறுத்தம் செய்தனர். தேசபக்தர் வ.உ.சி. 40 ஆண்டு கள், சுப்ரமண்ய சிவா 10 ஆண்டுகள் தண்டனையை எதிர்த்தும் தூத்துக்குடி திருநெல்வேலியில் தொழிலாளர் அரசியல் வேலை நிறுத்தம் செய்தனர். ஸ்தாபனரீதியாக தொழிற்சங்கம் ஒன்று ஏற்படுத்தி அங்கத்தினர்களைச் சேர்த்து அவர்களுக்கு ஸ்தாபன உணர்ச்சியை ஏற்படுத்தியது, 27-4-1918ல் சென்னை மாநகரில் திரு. பி. பி. வாடியா, திரு. வி. க., சக்கரை செட்டியார், செல்வபதி, சிங்காரவேலு முதலியவர்களேயாகும். சென்னை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வங்கத்திலோ, அல்லது பம்பாய் மாநகரத்திலோ தொழிலாளர்கள் போராடியது போல் போராடாமலிருந்தபோதிலும் (1921-33 ,கால கட்டத்தை எடுத்துக் கொண்டால் சென்னையில் 28 லட்ச வேலை நிறுத்த நாட்கள் நஷ்டம் என்றால், வங்கத்தில் இரண்டு கோடி வேலை நிறுத்த நாட்கள், பம்பாயில் 6 கோடி வேலை நிறுத்த நாட்கள்) சங்க வடிவமாக இயங்கியது சென்னையே என்று கூறலாம்.

பெசண்டு அம்மையார் யுத்த காலத்தில் (1918 ஜூலை 3-ம் தேதி) செய்த ஒரு பிரசங்கத்தில், வேலை நிறுத்தம் செய்யக் கூடாது, என்று கூறினார்.

ஆனல் வேலை நிறுத்தங்கள் ஏற்படுவது தொழிலாளர்கள் கஷ்டங்களை போக்கிக் கொள்ளும் முறையாதலால் திரு.வி.க., சக்கரை செட்டியார், சிங்காரவேலு போன்ற தலைவர்களின் தலைமையில் பல போராட்டங்கள் நடைபெற்றன.

தூத்துக்குடி பஞ்சாலைத் தொழிலாளர்களையும், ஏனையத் தொழிலாளர்களையும் ஸ்தாபன ரீதியாக தொழிற்சங்கங்களை அமைத்து அவர்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்கியவர் தேசபக்தர் வா.உ.சி. அவர்களேயாகும்.

தோழர் சிங்காரவேலனர் தமிழகத்தின் தலைசிறந்த அரசியல் வாதியாகவும், தொழிற்சங்கத் தலைவராகவும் காட்சி அளிக்கின்றார்.

1924 ல் கான்பூர் கம்யூனிஸ்டு சதிவழக்கு நடைபைற்றது. தோழர்கள், எஸ். ஏ. டாங்கே, நளினி குப்தா, முஜபர் அகமத், ஷவ்கத் உஷ்மானி ஆகிய தலைவர்கள் கைது செய்யப் பட்டு தண்டிக்கப்பட்டனர்.

தோழர் ம. சிங்காரவேலு இச்சதி வழக்கையொட்டி கைது செய்யப்பட்டார். உடல் நலம் பெரிதும் பாதிக்கப் பட்டதன் காரணமாக ஜாமீனில் வெளிவந்தார். இந்த வழக்கு நடந்து முடிந்த பின்னர் சிங்காரவேலு :அவர்கள் மீது மீண்டும் வழக்கை நடத்தினல் அதிக பணம் செலவாகும் என்று கருதியும், சிங்காரவேலனரை தண்டிக்க போதிய சாட்சியம் இல்லை என்று கருதியும் வைஸ்ராய் சிங்காரவேலு மீதிருந்த வழக்கை வாபஸ் பெற்றார்.

1927 ஆண்டில் மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்து, பர்மா ஷெல் வெள்ளை முதலாளிகளின் திமிர்த்தாண்டவத்தை அடக்க தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தபோது.

"எண்ணெய் தீப்பற்றி எரியக் கூடியது; விளையாடாதே!" என்று வெள்ளை முதலாளிகள் பயமுறுத்தினர். இதற்கு தோழர் சிங்காரவேலு.

"தொழிலாளர் உணர்ச்சி மிகவும் தீப்பற்றி எரியக் கூடியது, திமிர் பிடித்த வெள்ளை முதலாளியே தொழிலாளரிடம் வாலாட்டாதே!" என்று முழக்கம் செய்துள்ளார்.

வெள்ளையர் ஆட்சி போலீசும், இராணுவமும் குவிக்கப் பட்டன. துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. தமிழகத்தின் சிங்கம் இதற்குப் பயப்படுமா?

தலைவர் ம. சிங்காரவேலு, அஞ்சாநெஞ்சுடன் பெட்ரோல் டாங்குகளுக்கு தீ வைக்குமாறு தொழிலாளிகளுக்கு அறைகூவல் விடுத்தார். பெட்ரோல் டாங்குகள் தீப்பற்றி எரிந்தன.

1928-ம் ஆண்டில் தென் இந்திய இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் தமிழக தொழிற்சங்க இயக்கத்தில் பொன் எழுத்தால் பொறிக்கப்பட வேண்டியதாகும். அன்று, அத் தொழிலாளர்களுக்குத் தலைவர் சிங்காரவேலு.

தென் இந்திய ரயில்வே வெள்ளையர்க் கம்பெனிக்குச் சொந்தம். தோழர்கள் ம. சிங்காரவேலு, முகுந்தலால் சர்க்கார், டி. கிருஷ்ணசாமிப் பிள்ளை தலைமையில் தென் இந்திய இரயில்வே தொழிலாளர்கள் அதி தீவிரப் போராட்டத்தில் இறங்கினர். ஆவேசமும், உணர்ச்சியும் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடச் செய்தார் தோழர் ம. சிங்காரவேலனார். இரயில் ஓடவில்லை. வெள்ளையர் அரசு அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டது. போத்தனூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. எண்ணற்ற தொழிலாளர்கள் சொல்லமுடியாத அடக்குமுறையால் அவதிப்பட்டனர்.

தோழர் சிங்காரவேலு முதலிய பல முக்கிய தலைவர்கள் மீது சதிவழக்கு ஜோடிக்கப்பட்டது. திருச்சி செஷன்ஸ்ஜட்ஜ் சதிவழக்கை விசாரித்து, விசாரிக்கப்பட்ட எல்லோருக்கும் கடுமையான தண்டனை - நீண்டகால சிறைவாசம் விதித்தார்

அனைத்திந்தியா எங்கும் குறிப்பாக தமிழகத் தொழிலாளர்களும், பொதுமக்களும், தோழர் சிங்காரவேலு அவர்களை விடுதலை செய்யக்கோரி, பலத்த கிளர்ச்சி செய்தனர்.

தோழர் சிங்காரவேலு அவர்கள் விடுதலை பெற்றார். பிறகு, பெரியார் ஈ.வெ.ரா. தோழர் சிங்காரவேலனாரை அணுகி "குடி அரசு" பத்திரிகையில் கட்டுரை எழுதவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தோழர் ம. சிங்காரவேலு சுயமரியாதை இயக்கத்தில் தீவிர பங்கெடுக்கத் தொடங்கினார். கடவுள் நம்பிக்கை, மூடப்பழக்க வழக்கங்கள் முதலியவற்றை அறவே ஒழித்தாலொழிய, தொழிலாளி வர்க்கம் முற்போக்குப் புரட்சிப் பாதையில் செல்ல இயலாது, என்பதை நன்கு உணர்ந்த தோழர் சிங்காரவேலு, எண்ணற்ற கட்டுரைகளும், நூல்களும் எழுதினார்.

"லேபர்கிசான் கெசட்" என்ற ஓர் ஆங்கில மாதமிரு முறை 1923-24-ம் ஆண்டில் வெளிவந்த பத்திரிகையை தோழர் ம. சிங்காரவேலு நடத்தினார். நவம்பர் புரட்சிதினம், லெனின் பிறந்த நாள், மார்க்ஸ் பிறந்த நாள், மேதினம் முதலியன முதன் முதலில் தமிழகத்தில் தோழர் ம. சிங்கார வேலனார் தலைமையில்தான் நடைபெற்றன. 1923-24 ஆண்டில் "தொழிலாளன்" என்ற மாதமிருமிறை வெளிவந்த தமிழ் பத்திரிகையை நடத்தியுள்ளார்.

1935–36-ல் புது உலகம் என்ற மாதப் பத்திரிகையிலும், 1937-ல் ஜனசக்தியிலும், தோழர் சிங்காரவேலு தொழிலாளர் செல்ல வேண்டிய பாதையை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். இந்திய கம்யூனிஸ்டு கட்சியை முதன் முதலில் தமிழகத்தில் துவக்கியப் பெருமை தலைவர் ம. சிங்காரவேலு அவர்களைத் தான் சாரும். 55 ஆண்டுகட்கு முன், தன்னை கம்யூனிஸ்ட் என்று அனைவரும் அறியும்படி கூறினார்.

தமிழகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர்களாக, ஆசான்களாக வா.உ.சி. ம. சிங்காரவேலனார், திரு.வி.க. சக்கரை செட்டியார், முதலியோர் காட்சி அளிக்கின்றனர். குறிப்பாக தொழிலாளி வர்க்கமும், மக்களும் முற்போக்குப் பாதையில் செல்ல, பொருள்முதல் வாதத்தை போதித்து, சமூக ஏற்றத் தாழ்வுகளையும் ஜாதிக் கொடுமைகளையும் சாடி, மக்கள் மக்களாகத் திகழ வேண்டும் என்று

அயராது பாடுபட்டார் பெரியார் ஈ.வெ.ரா. இத்தலைவர்களை தமிழகத் தொழிலாளி வர்க்கம்—என்றென்றைக்கும் தன் இருதயத்தில் வைத்துக் கொள்ளும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

# தொழிலாளர் கல்வித் திட்டம்

நாடு பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்த காலத்தில், தொழிலாளர்களைப் பற்றியோ அவர்கள் கல்வியைப் பற்றியோ எள்ளளவும் அவ்வரசு கவலைப்படவில்லை. சுதந்திரம் அடைந்த பிறகு சிலகாலம் இக்கொள்கை நீடித்தது.

*1956–1961* அதாவது நம் நாட்டின் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ்தான் தொழிலாளர் வளர்ச்சி, அவர்கள் கல்வி இடம் பெற்று, சில பல முடிவுகள் அமுல் படுத்தப்பட்டன.

*1957*-ல் இந்திய அரசு தொழிலாளர்கள் கல்வித் திட்டம் ஒன்றை தீட்டியது. ஓர் முக்கூட்டு மாநாட்டில் அரசு, தொழிலாளர், முதலாளிகள் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டன.

*(1)* சங்க நிர்வாகிகளுக்கும், பொதுவாக அங்கத்தினர் களுக்கும் பயிற்சி அளித்து சங்கங்களை பலப்படுத்துவதும், மேலும் சக்தியாகச் செயல்படவும் செய்வது.

*(2)* தொழிற்சங்க ஜனநாயகமும், நிர்வாகமும் திறமை யாகச் செயல்பட சாதாரணத் தொழிலாளர்கள் தலைமை ஏற்க பயிற்சி அளிப்பது.

*(3)* நாட்டின் ஜனநாயக சமுதாயத்தில் உரிய இடம் பெற, சமுதாயம் பொருளாதாரக் கடமைகளை நன்குணர்த்த ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பது.

*(4)* பொருளாதாரச் சூழ்நிலையையும் தங்கள் தொழிற் சங்கத்திற்கும் நாட்டிற்கும் அவர்கள் ஆற்ற வேண்டியக்

கடமைகளையும் அவர்களுக்குள்ள உரிமைகளையும் நன்கு உணர பயிற்சி அளிப்பது.

இந்த சீரிய நோக்கங்களை அடைய மத்திய இந்திய அரசு "தொழிலாளர் கல்வி மத்திய குழு" (Central Board of Workers Education) என்பதை ஏற்படுத்தியது. இக்குழுவில் மத்திய அரசு, மாநில அரசுகள், தொழிலாளர்கள், முதலாளிகள் பிரதிநிதிகள் 20 பேருக்கு மேற்படாமல் உள்ளனர். இந்தத் திட்டம் தொழிலாளர்களுக்காக என்றபடியால் மாநிலங்களில், ஏறத்தாழ எல்லா முக்கிய தலைநகரங்களிலும், 30 இடங்களில் இக்கல்வித் திட்டப் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

ஒரு திட்டப்படி தொழிலாளர் கல்வி நடத்தப்படுகிறது. மாநில முக்கிய தொழிற் சங்கத் தலைவர்கள், சில தலைப்புகளின் பேரில் பேச அழைக்கப்படுகின்றனர். தொழிலாளர்களுக்கு சாதாரணமாக மூன்று மாதங்கள் கல்வி அளித்தபின், பல முக்கிய தொழிற்சாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இந்த திட்டம் வரவேற்கத்தக்கதே என்ற போதிலும், எந்த அளவு இக்கல்வி பெற்ற பிறகு தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தைக் கட்டி வளர்ப்பதில் பயன்படுகிறார்கள் என்பது கேள்விக் குறியதாகத்தான் இருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, சில பல மாற்றங்களும் இத்திட்டத்தில் தேவைப்படுகிறது. இத்திட்டத்தை தொழிற் சங்கங்கள் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவது பயனளிக்கும் என்று திரு. கஜேந்திரகட்கர் கூறியுள்ளார்.

பொதுவாக தொழிலாளி வர்க்கம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்படுகின்றன.

வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில்—தொழிலாளர்களின் எல்லாப் பிரச்சனைகளுக்கும், போராட்டங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது—தனி உடைமையும், லாபத்திற்காக உற்பத்தியுமேயாகும்.

தொழிலாளர் கல்வி, தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நலன் அடிப்படைக்குத் தேவையான கல்வித் திட்டமாகத் தீட்டவேண்டும்.

பலதரப்பட்ட தொழிற் சங்கங்களின் கொள்கை அடிப்படை வித்தியாசங்களை தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டிய கடமையும் இக்கல்வித் திட்டத்தைச் சாரும்.

பொதுவாக தொழிலாளர் கல்வித்திட்டம் என்பதை 1957 முதல் அமைத்து 1972 மார்ச்சு 31 தேதி வரை 25,119 தொழிலாளர்—ஆசிரியர்களையும் 12,21,613 தொழிலாளர்களையும் தயாரித்துள்ளது.

தொழிலாளர்கள் கசடறக் கற்று அதன்படி செயல்பட்டால் தொழிற் சங்கங்களுக்கும், நாட்டிற்கும் நல்லது என்பதில் ஐயமில்லை.

## சீரமைப்பு (Rationalisation) என்ருல் என்ன ?

விஞ்ஞான வளர்ச்சி, தொழில்புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. அதாவது நவீன இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பழைய இயந்திரங்களை நடத்த ஆயிரம் தொழிலாளர்கள் தேவைப்படுகிருர்கள் என்ருல், புதிய நவீன இயந்திரங்களுக்கு 200 அல்லது 250 தொழிலாளர்களே போதுமானது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன இயந்திரத்தைப் புகுத்துவதை சீரமைப்பு (Rationalisation) என்று கூறுகிருேம்.

வேலை செய்யும் எண்ணற்ற தொழிலாளர்களுக்கு வேலை போவதுடன், எண்ணற்ற வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அறவே இல்லாமற் போவதினுல், தொழிலாளி வர்க்கம், நம் நாட்டில் இந்த சீரமைப்பைக் கடுமையாக எதிர்த்து வருகிறது

1957-ம் ஆண்டு முக்கூட்டு மாநாட்டில் (அரசு, தொழிற் சங்கத் தலைவர்கள், முதலாளிகள்) சீரமைப்பை ஓட்டி ஒரு முடிவு ஏற்பட்டது.

இம் முடிவின்படி "ரேஷனலைசேஷன்" விளைவால் ஆள் குறைப்பு ஏற்படலாகாது; இன்று பெறக்கூடிய ஊதியத்தில் எவ்வித வெட்டும், குறைவும் ஏற்படக்கூடாது; தவிர்க்க

முடியாமல் ஆளைக் குறைத்தால் அவர்களுக்கு வேறு வேலை அதே ஆலையில் கொடுக்கவேண்டும். இவற்றை சம்பந்தப் பட்ட தொழிற் சங்கத்துடன் சேர்ந்துதான் முடிவு செய்ய வேண்டும். சீரமைப்பின் விளைவால் வரக்கூடிய லாபம் அனைத்தும் முதலாளிக்கு மட்டும் போகக்கூடாது. அந்த லாபத்தில் தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் பங்கிருக்க வேண்டும். வேலை பளுவு என்பதை இஷ்டம்போல் புகுத்தக் கூடாது; சம்பந்தப்பட்ட தொழிற் சங்கத்தின் ஒப்புதல் பேரில்தான் வேலை பளுவு நிர்ணயிக்கப்படவேண்டும். இவ்வாறு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும், சீரமைப்பு என்பது இந்திய தொழிலாளி வர்க்கத்தை பெரிதும் பாதிக் கின்றது என்பதில் சந்தேகமில்லை.

# ஆட்டோமேஷன் (Automation) என்றால் என்ன?

விஞ்ஞான கண்டுபிடிப்புக்களின் விளைவாக இதுவரை கண்டிராத கேட்டிராத நவீன இயந்திரங்கள் ஏற்பட்டுள்ளன. இவைகள் மின்சாரத்தைக் கொண்டு தானாக இயங்கக்கூடி யவையாகும். இப்படிப்பட்ட இயந்திரங்கள் பஞ்சாலை, சண லாலை முதலியவற்றிலும், ஆராய்ச்சிக் கழகங்களிலும், பெட் ரோலியம், போக்குவரத்து, "டிபென்ஸ்", ரசாயன உற்பத்திக் கூடங்கள் முதலியவற்றில் புகுத்தப்பட்டுள்ளன. இவைகளை கம்ப்யூடர்ஸ் (Computers) என்று அழைக்கின்றோம். பொது வாக இவைகள் மனிதன் போடக்கூடிய எல்லாவித கணக்கு களையும், புள்ளிகளையும் தயாரிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவை. உதாரணமாக நூறு பேர் ஒரு மாதத்தில் தயாரிக்கக்கூடிய புள்ளிகளை ஒரு சில மணி நேரங்களில் "கம்ப்யூடர்கள்" செய்யும் சக்தி வாய்ந்தவை.

எண்ணற்ற படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு என்பதை அறவே இல்லாமற் செய்யக்கூடிய பேய் போன்றதாகும். ஆகவே இதை நம் நாட்டில் ஆயுள் இன்ஷூரன்ஸ் சிப்பந்திகள்

முதல் முதல் எதிர்க்கத் தொடங்கினர். இன்று இந்திய தொழிலாளி வர்க்கம் "கம்ப்யூடர்கள்" புகுத்துவதை கடுமை யாக எதிர்த்து வருகின்றது,

## தொழில் தகராறுகள் சட்டம் என்பது என்ன?

1920-ம் ஆண்டில் முதன் முதலாக தொழில் தகராறு சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. பிறகு 1929-ல் சில பல திருத்தங்களுடன் தொழில் தகராறு சட்டம் நிறைவேற்றப் பட்டது. இச்சட்டமும் எவ்விதத்திலும் உதவவில்லை. ஆகவே 1947 ஆண்டில், ஏப்ரல் முதல் தேதியிலிருந்து, புதிய தொழில் தகராறு சட்டம் அமுலுக்கு வந்தது.

இச்சட்டத்தின் நோக்கம் :—

(1) முதலாளி தொழிலாளி இடையே நல்லுறவு ஏற் படுத்துவது.

(2) தொழில் தகராறுகள் ஏற்பட்டால் அவைகளை தொழிற் கோர்ட்டுக்கு விடுவது.

(3) சட்ட விரோதமான வேலை நிறுத்தங்களையும், கத வடைப்புக்களையும் தடுப்பது.

(4) "லே ஆப்" (lay off) அல்லது ஆள் குறைப்பு (retrenchment) செய்தால் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பது.

(5) கூட்டுபேரம் நடத்த உதவுவது என்பனவே.

நடைமுறையில், தொழிற் கோர்ட்டுகள் சட்டத்தை மட்டும் பார்க்காமல், சமூக நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் என்று பன்முறை சுப்ரீம் கோர்ட்டே கூறியுள்ளது.

இச்சட்டமில்லை என்றால், தொழிற் சங்கங்கள் தங்கள் நியாயத்தை வலியுறுத்த இடமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தொழிற் சங்கத்தை நடத்தக்கூடியவர்கள் இச்சட்டத்தை நன்கு படித்து, இதில் உள்ள ஒரு சில வசதிகளை பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

# திருக்குறள் காட்டும் நல்வழி

தொழிலாள வர்க்கம் தன் விடுதலையை அடையும்போது, சமுதாயமனைத்தும் விடுதலை பெற்று, மனிதன் வாழ்வாங்கு வாழத் தொடங்குவான். இது ஓர் புரட்சியின்மூலம்தான் ஏற்பட முடியும். அவ்வாறு அமையும் சமுதாயத்தைத்தான் சோஷலிஸ்டு சமுதாயம் என்கிறோம். சோஷலிஸம் முதல் படியாகும். அடுத்தது கம்யூனிஸம் என்பதே.

இவ்வாறு புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டிய கடமை, வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளியை எதிர்நோக்கு கின்றது. ஆகவே வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளி இன்றே ஒரு புதிய மனிதனைக் காட்சி அளிக்கவேண்டும். இதற்கு உதவியாக சில குறள்களை இங்கு தருவோம். அவை களின் கருத்துக்களை நன்குணர்ந்து அதன்படி நடக்கவேண்டும். வள்ளுவர் காலத்தில் அது நல்வழி என்றால், இன்றும் சரி. புதிய சோஷலிஸ்டு சமுதாயத்திலும் சரி, இந்நல்வழியை தொழிலாளி வர்க்கம் பின்பற்றத்தான் வேண்டும். ஆகவே, இங்கு சில குறள்களைக் கொடுத்து, அதை தொழிலாளர் புரிந்துக் கொள்ள சுருக்கமான விளக்கத்தையும் தருகிறோம்.

'' நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.'' —28

தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வை வளர்க்க பய னுள்ளவைகளைச் சொல்ல வேண்டும். அவ்வாறு செய்வோரின் புகழ் தானகவே ஒளிவீசும்.

'' மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.'' —34

மனத் தூய்மையுடன் தொழிலாளி இயங்கினல், அதைவிட அறன் வேறு ஒன்றுமில்லை.

'' செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயர்பால தோரும் பழி.'' —40

தொழிலாளி வர்க்கம் விடுதலை பெற்று ஆட்சிபுரியச் செய்யும் அனைத்தும் அறனே. அவ்வாறு செயல்படாமலிருப்பது பழியே யாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்." —50

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காகப் பாடுபடுவதே வாழ்வாங்கு வாழ்வதாகும். அவ்வாறு வாழ்பவன் கண்கண்டக் கடவுளாவான்.

"தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்தெரிவார்." —104

ஒரு தொழிற்சங்கம் கடுகளவு நன்மை செய்த போதிலும் வர்க்க உணர்வு உள்ள தொழிலாளி அதை மலைபோல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு." —110

தொழிற் சங்கம் செய்த நன்மையே ஒருபோதும் மறவாதே. இதைத் தவிர அறண் வேறு இல்லை. செய்த நன்றியை மறந்தவன் வாழமுடியாது.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்டவடு." —129

தொழிலாளி வர்க்கம் உயர்ந்தபண்பாட்டுடன் வாழவேண்டும். தரம் குறைந்து எப்பொழுதும் பேசாதே.

"கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன் இன்று பின் நோக்காச் சொல்." —184

ஒருவனை வைத்துக் கொண்டு கடுமையாக விமர்சிக்கலாம். ஆனால் அவன் இல்லாதபோது அவனைப்பற்றிப் பேசுவது தவறு.

"ஏதிலார் குற்றம் போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு." —190

பிறர் குற்றத்தை உன்னால் எப்படி பார்க்க முடிகின்றதோ, அதே போல் உன் குற்றத்தைப் பார்த்து போக்கிக்கொள். அவ்வாறு செய்தால் உன் லட்சியமாகிய சுரண்டலற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவதில் எந்த துன்பமும் வராது.

" தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று." —236

எல்லோரும் சுகவாழ்வு வாழ, புதிய சமுதாயம் அமைக்கப் பாடுபடு. அதுதான் புகழ் பெற்ற வாழ்வாகும். புகழில்லாமல் வாழ்வதைவிட சாவதே மேல் !

" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு." —299

மக்களுக்கு வெளிச்சத்தைத் தந்து வழி காண்பிக்கும் விளக்கு —புதிய சமுதாய அமைப்பே—இதுதான் பொய்யா விளக்கு மற்றெல்லாம் இருள் சூழ்ந்த விளக்குகளே யாகும்.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக." —391

கற்க வேண்டியவைகளை நல்ல முறையில் கற்க வேண்டும். கற்றால் போதாது. கற்றபடி செயல்பட வேண்டும்.

" செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை." —411

செவிக் கொடுத்துக் கேட்டு அறிவை வளர்த்துக் கொள்வது, எல்லாச் செல்வத்தையும் விட மிக உயர்ந்ததாகும்.

" எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு." —423

யார், யாரோ எதை எதையோ, கூறுவார்கள். யார் கூறுவது உண்மை என்றுணர்வதே அறிவாகும்.

" வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்." —435

எவ்வித ஆபத்தும் வருவதற்கு முன்னரே, சங்கத்தில் சேர்ந்து செயல்படு. ஆபத்து வந்தபின் சங்கத்திற்குச் செல்லலாம், என்ற போக்கு ஒழிக.

" தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற் பின்
என்குற்ற மாகும் இறைக்கு." —436

*தன் குற்றத்தை முதலில் கண்டறிந்து அதைத் திருத்திக் கொண்டபின், பின்னர் பிறர் குற்றத்தைப் பற்றிப் பேசுகின்றவன்தான் தலைவனாவான்.*

" எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு." —467

*அவசரப்பட்டு எந்த காரியத்திலும் இறங்காதே. திட்டமிட்டு ஒரு காரியத்தில் இறங்கியபின், முன்வைத்த காலை பின் வைக்காதே !*

" வினைவலியும் தன்வலியும் மாற்றான்வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" —471

*எந்த காரியத்தையும் ஆரம்பிக்குமுன் அக்காரியத்தின் நியாயம், உன் சக்தி, எதிரியின் சக்தி, உனக்குத் துணைநிற்கும் சக்தி, இவ்வனைத்தையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதற்குப் பிறகு ஒரு காரியத்தில் இறங்கினால் வெற்றி திண்ணம்.*

" ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்." —484

*ஒரு காரியத்தை செய்யுமுன் எப்பொழுது எங்கு, எவ்வாறு செய்தால் வெற்றி கிட்டும் என்பதை ஆராய்ந்து, அக்காரியத்தில் இறங்க வேண்டும். அவ்வாறு செய்வோர் உலகத்தையே வெல்லவேண்டும் என்றாலும் வெற்றி பெறக்கூடிய வல்லவர் ஆவர்.*

" இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்." —517

*ஒரு வேலையை ஒருவருக்கு ஒப்படைக்கு முன், அவர் திறமை, ஆற்றல் உறுதி முதலியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்துச் செய்ய வேண்டும். அதுதான் வெற்றியைத் தரும்.*

" முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." —616

கஷ்டப்பட்டு வேலை செய்தால், அதன் பலனை அடையலாம், சோம்பேரி படாதபாடு படுவான்!

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." —666

மன உறுதியுடன், விடாமுயற்சியில் இறங்குகின்றவன் தன் லட்சியத்தை அவன் நினைத்தபடியே அடைவான் என்பதில் ஐயமில்லை.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு." —788

கட்டிய வேட்டி அவிழ்ந்தால், நீ நினைக்காமலேயே எவ்வாறு உன் கை அவ்வேட்டியை தாங்கிப் பிடிக்கின்றதோ, அவ்வாறே உனக்கு வரக்கூடிய கஷ்டத்தை தாங்குவது உன் நண்பன்—சங்கமே என்பதை உணர்க!

3

# அனுபந்தம்—I

## ராஜ்ய சபை—லோக் சபை ஸ்தானங்கள்
## 1972 ஜூன் 24 முடிய மாநிலங்களுக்கு உரியவை

| எண் | மாநிலங்களின் பெயர் | ராஜ்ய சபை ஸ்தாபனங்கள் | லோக் சபை ஸ்தாபனங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆந்திரப் பிரதேசம் | 18 | 41 |
| 2 | அஸாம் | 7 | 14 |
| 3 | பீஹார் | 22 | 53 |
| 4 | குஜராத் | 11 | 24 |
| 5 | ஹரியாரு | 5 | 9 |
| 6 | ஹிமாசல் பிரதேசம் | 3 | 4 |
| 7 | ஜம்மு காஷ்மீர் | 4 | 6 |
| 8 | கேரளா | 9 | 19 |
| 9 | மத்திய பிரதேசம் | 16 | 37 |
| 10 | மஹாராஷ்டிரம் | 19 | 45 |
| 11 | மணிபூர் | 1 | 2 |
| 12 | மேகாலயா | 1 | 2 |
| 13 | கர்நாடகா | 12 | 27 |
| 14 | நாகாலாண்டு | 1 | 1 |
| 15 | ஒரிசா | 10 | 20 |
| 16 | பஞ்சாப் | 7 | 13 |
| 17 | ராஜஸ்தானம் | 10 | 23 |
| 18 | தமிழ்நாடு | 18 | 39 |
| 19 | திரிபுரம் | 1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 20 | உத்திரப் பிரதேசம் | 34 | 85 |
| 21 | மேற்கு வங்கம் | 16 | 40 |
| 22 | அந்தமான் நிகோபுரர் தீவுகள் | — | 1 |
| 23 | சண்டிகார் | — | 1 |
| 24 | தத்ரா—நகர் ஹாவேரி | — | 1 |
| 25 | டெல்லி | 3 | 7 |
| 26 | கோவா, தாமன்தையூ | — | 2 |
| 27 | லெகாடிவ், மினிகாய், அமினி தீவிதீவுகள் | — | 1 |
| 28 | மிஜோரம் | 1 | 1 |
| 29 | புதுச்சேரி | 1 | 1 |
| 30 | அருணசல பிரதேசம் | 1** | 1** |
| 31 | ஆங்கிலோ இந்தியர்கள் | — | 2** |
| 32 | ஜனாதிபதி இந்திய அரசியல் சட்டம் விதி 80 (1) (A) யின் நியமிப்பது ... | 12 | — |
| | மொத்தம் ... | 243 | 524 |

குறிப்பு (1) இரண்டு நட்சத்திரம் போட்டது — ஜனாதிபதி நியமிப்பு.

(2) 1972 ஜூன் 24 முடிய ஜனத்தொகை அடிப்படையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டது.

# அனுபந்தம்—II

**1972 ஜூலை 1-ம் தேதியன்று மாநிலங்களில் உள்ள சட்டசபை, மேல் ஸ்தானங்களின் விவரம்**

| எண் | மாநிலங்களின் பெயர் | கவுன்சில் மேல் சபை | அசெம்பிளி ஸ்தானங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆந்திர பிரதேசம் | 90 | 287 |
| 2 | அஸாம் | — | 144 |
| 3 | பீஹார் | 96 | 318 |
| 4 | குஜராத் | — | 168 |
| 5 | ஹரியாணு | — | 81 |
| 6 | ஹிமாசல் பிரதேசம் | — | 68 |
| 7 | ஜம்மு, காஷ்மீர் | 36 | 75 |
| 8 | கேரளா | — | 133 |
| 9 | மத்திய பிரதேசம் | — | 296 |
| 10 | மஹாராஷ்டிரம் | 78 | 270 |
| 11 | மணிபூர் | — | 60 |
| 12 | மேகாலயா | — | 60 |
| 13 | கர்ணுடகா | 63 | 216 |
| 14 | நாகாலாண்டு | — | 52 |
| 15 | ஒரிசா | — | 140 |
| 16 | பஞ்சாப் | — | 104 |
| 17 | ராஜஸ்தானம் | — | 184 |
| 18 | தமிழ்நாடு | 63 | 234 |
| 19 | திரிபுரம் | — | 60 |
| 20 | உத்திரப் பிரதேசம் | 108 | 425 |
| 21 | மேற்கு வங்கம் | — | 280 |
| 22 | டெல்லி | — | 56 |
| 23 | கோவா, தாமன்தையூ | — | 30 |
| 24 | புதுச்சேரி | — | 30 |
| 25 | மிஜோரம் | — | 30 |
| | மொத்தம் ... | 534 | 3771 |

குறிப்பு (1) ஜனத்தொகை அடிப்படையில் ஸ்தானங்கள் சட்டசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) சிறிய ராஜ்யங்களில் மேற்சபை அமைக்கப் படவில்லை.

# அனுபந்தம்—III

## முக்கியப் பொதுத்துறை நிறுவனங்களும் அவைகளில் இட்ட மூலதனமும்

| எண் | நிறுவனத்தின் பெயர் | மூலதனம் லட்ச ரூபாய்கள் |
|---|---|---|
| 1 | ஹிந்துஸ்தான் ஸ்டீல் | 1,03,622 |
| 2 | கார்டன் ரீச்சு ஒர்க்ஷாப்பு | 792 |
| 3 | மஸ்கான் டாக் | 1,028 |
| 4 | பிராகா-டூல்ஸ் | 669 |
| 5 | ஹிந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் | 229 |
| 6 | இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ் | 950 |
| 7 | ஹிந்துஸ்தான் கேபில்ஸ் | 707 |
| 8 | ஹிந்துஸ்தான் ஷிப்யார்ட் | 1,210 |
| 9 | ஹிந்துஸ்தான் மெஷீன் டூல்ஸ் | 2,988 |
| 10 | பாரத் எலக்ட்டிரானிக்ஸ் | 1,200 |
| 11 | ஹெவி எலக்ட்ரிகல்ஸ் (இந்தியா) | 12,549 |
| 12 | நேஷனல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் | 818 |
| 13 | ஹெவி இன்ஜீனீரிங் கார்ப்பொரேஷன் | 26,922 |
| 14 | துங்கபத்திரா ஸ்டீல் பிராஜெக்ட்ஸ் | 101 |
| 15 | பாரத் எர்த்து மூவர்ஸ் | 2,120 |
| 16 | ஹிந்துஸ்தான் ஏரோநாடீக்ஸ் | 20,910 |
| 17 | பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் | 17,682 |
| 18 | மைனிங்கு அண்டு அல்லேட் மெஷீனரி கார்ப்பொரேஷன் | 6,045 |
| 19 | பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவாங்கூர் | 7,389 |
| 20 | நேஷனல் நியூஸ் பிரிண்ட் அண்டு பேப்பர் மில்ஸ் | 1,196 |
| 21 | ஹிந்துஸ்தான் ஆன்டிபயாடீக்ஸ் | 247 |

| | | |
|---|---|---|
| 22 | ஹிந்துஸ்தான் இன்செக்டிசைடஸ் | 126 |
| 23 | ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மானுபாக்சரிங்கு கம்பெனி | 1,666 |
| 24 | பெர்ட்டிலைசர் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா | 22,945 |
| 25 | இந்தியன் டிரக்ஸ் அண்டு பார்மெடிகல்ஸ் | 8,151 |
| 26 | இந்தியன் நேர் அர்த்ஸ் | 380 |
| 27 | நேஷனல்கோல் டிவலப்மெண்டு கார்ப்பொரேஷன் | 19,486 |
| 28 | நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் | 17,326 |
| 29 | நேஷனல் மினரல் டெவலப்மெண்டு கார்ப்பொரேஷன் | 5,993 |
| 30 | ஆயில் அண்டு நெசுரஸ் கேஸ் கருஷன் | 21,823 |
| 31 | இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் | 12,174 |
| 32 | கொச்சின் ரிபைனரீஸ் | 1,996 |
| 33 | ஸ்டேரட் டிரேடிங்கு கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா | 2,961 |
| 34 | மினரல்ஸ் அண்டு மெட்டல்ஸ் டிரேடிங்கு கார்ப்பொரேஷன் ஆப் இப்தியா | 362 |
| 35 | புட் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா | 27,947 |
| 36 | ஏர் இந்தியா | 7 329 |
| 37 | இந்தியன் ஏர்லைன்ஸ் | 7,305 |
| 38 | ஷிப்பிங்கு கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா | 10,932 |
| 39 | என்ஜினீர்ஸ் (இந்தியா) | 25 |
| 40 | மாடர்ன் பே கரீஸ் | 355 |

# அனுபந்தம் IV

## இந்திய மாநிலங்களில் உள்ள நகரங்கள், கிராமங்கள் எண்ணிக்கை

1971 ஜனத்தொகை அடிப்படையில் நகரங்களும்
1971 ஜனத்தொகை அடிப்படையில் கிராமங்கள்

| எண் | மாநிலங்கள் | நகரங்கள் எண் | கிராமங்கள் எண் |
|---|---|---|---|
| 1. | ஆந்திர பிரதேசம் | 207 | 27,084 |
| 2. | அஸ்ஸாம் | 69 | 20,565 |
| 3 | பீஹார் | 161 | 67,665 |
| 4. | குஜராத் | 200 | 18,584 |
| 5. | ஹரியானு | 65 | 6,669 |
| 6. | ஹிமாசல் பிரதேசம் | 35 | 13,060 |
| 7. | ஜம்மு, காஷ்மீர் | 43 | 6,559 |
| 8. | கேரளா | 88 | 1.573 |
| 9. | மத்தியப் பிரதேசம் | 233 | 70,414 |
| 10. | மஹாராஷ்டிரம் | 257 | 35,851 |
| 11. | மணிப்பூர் | 8 | 1,866 |
| 12. | மேகாலயா | 3 | 4,407 |
| 13. | கர்ஞடகா | 270 | 26,377 |
| 14. | நாகாலாண்து | 3 | 814 |
| 15. | ஒரிசா | 78 | 46,466 |
| 16 | பஞ்சாப்பு | 106 | 11,947 |
| 17. | ராஜஸ்தான் | 151 | 32,241 |
| 18. | தமிழ் நாடு | 241 | 14.124 |
| 19. | திரிபுரம் | 6 | 4,932 |
| 20. | உத்திரப் பிரதேசம் | 293 | 1,12,624 |
| 21. | மேற்கு வங்கம் | 137 | 38,454 |
| 22. | புதுச்சேரி | 5 | 388 |
| 23. | ஏனைய யூனியன் பிரதேசங்கள் | 22 | 4,214 |

# அனுபந்தம் V

**1971 ஜனத்தொகை அடிப்படையில் செட்யூல் கிளாஸ் & செட்யூல் டிரைப்பு புள்ளி விவரங்கள்**

| மாநிலம் | செட்யூல் (1) கிளாஸ் எண்ணிக்கை | செட்யூல் (2) வகுப்பினர் எண்ணிக்கை | லோக் சபையில் மொத்தம் | (1) | (2) | ராஜ்யங்களில் சட்டசபை மொத்தம் | (1) | (2) |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆந்திரப் பிரதேம் | 57,74,548 | 16,57,657 | 41 | 6 | 2 | 287 | 40 | 11 |
| அஸ்ஸாம் | 9,12,557 | 16,06,648 | 14 | 1 | 2 | 114 | 8 | 14 |
| பீஹார். | 79,50,652 | 49,32,767 | 53 | 7 | 5 | 318 | 45 | 29 |
| குஜராத் | 18,25,432 | 37,34,422 | 24 | 2 | 3 | 168 | 11 | 22 |
| ஹரியாணு | 18,95.933 | ... | 9 | 2 | — | 81 | 15 | — |
| ஹிமாசல் பிரதேசம் | 7,69,572 | 1,41,610 | 4 | 1 | — | 68 | 16 | 3 |
| ஜம்மு காஷ்மீர் | 3,81,277 | ... | 4 | — | — | 75 | 6 | — |
| கேரளா | 17,72,168 | 2,69,356 | 19 | 2 | — | 133 | 11 | 2 |
| மத்தியப் பிரதேசம் | 54,53,690 | 83,87,403 | 37 | 5 | 8 | 296 | 39 | 61 |
| மஹாராஷ்டிரம் | 30,25,761 | 29,54,249 | 45 | 3 | 3 | 270 | 15 | 16 |
| மணிபூர் | 16,376 | 3,34,466 | 2 | — | 1 | 60 | 1 | 19 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேகாலாய | 3,887 | 8,14,230 | 2 | — | 2 | 60 | — | 50 |
| கர்ணுடகா | 38,50,034 | 2,31,268 | 27 | 4 | — | 216 | 29 | 2 |
| நாகாலாண்டு | ... | 4,57,602 | 1 | — | — | 52 | — | — |
| ஒரிசா | 33,10,854 | 50,71,937 | 20 | 3 | 5 | 140 | 22 | 34 |
| பஞ்சாப் | 33,48 217 | ... | 13 | 3 | — | 104 | 23 | — |
| ராஜஸ்தானம் | 40,75,580 | 31,25,506 | 23 | 4 | 3 | 184 | 31 | 21 |
| தமிழ் நாடு | 73,15,595 | 3,11,515 | 39 | 7 | — | 234 | 42 | 2 |
| திரிபுரம் | 1,92,860 | 4,50,544 | 2 | — | 1 | 60 | 6 | 19 |
| உத்தரப் பிரதேசம் | 1,85,48,916 | 1,98,565 | 85 | 18 | — | 425 | 89 | — |
| மேற்கு வங்கம் | 88,16,028 | 25,32,969 | 40 | 8 | 2 | 280 | 55 | 16 |
| புதுச்சேரி | 72,921 | ... | 1 | — | — | 30 | 5 | — |
| ஏனைய யூனியன் பிரதேசங்கள் | 6,83,039 | 8,02,443 | 15 | 1 | 3 | 116 | 7 | — |
| அனைத்திந்தியாவில் | 7,99,95,896 | 3,80,15,162 | 522 | 77 | 40 | 3,771 | 516 | 321 |

குறிப்பு :- 1. லோக் சபையில் ராஜ்யத்திற்கு எவ்வளவு ஸ்தானங்கள் அவற்றில் செட்யூல் கிலாசுக்கு(1)லும் செட்யூல் டிரைப்புக்கு (2)லும் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களின் எண்ணிக்கை ஆகும்.

2. அதேபோல் ராஜ்ய சபையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

## அனுபந்தம் VI

### வேலை உள்ளவர்கள் இல்லாதோர் புள்ளி விவரம்

| | வேலை உள்ளவர்கள் | | மொத்த தொழிலாளர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| விவரம் | 1949ல் | 1968ல் | 1961 | 1966 | 1971 |
| பாக்டரிக்களில் | 29 லட்சம் 50 ஆயிரம் | 47 லட்சம் 60 ஆயிரம் | 16 கோடியே | 18 கோடியே | 20 கோடியே |
| பொதுத் துறையில் | 30 லட்சம் | 99 லட்சம் 30 ஆயிரம் | 22 லட்சம் | 16 லட்சம் | 34 லட்சம் |

வேலை இல்லாதோர்

| | முதல் 5 ஆண்டுத் திட்டம் | இரண்டாம் 5 ஆண்டுத் திட்டம் | மூன்றும் 5 ஆண்டுத் திட்டம் | வருடாந்திர திட்டம் [1966—1969] |
|---|---|---|---|---|
| வேலை இல்லாதவர்கள் புதிதாக வேலை தேடுவோர் | ஒரு கோடிய 23 லட்சம் | ஒரு கோடிய 71 லட்சம் | இரண்டு கோடிய 41 லட்சம் | இரண்டு கோடிய 16 லட்சம் |
| புதிய வேலை வாய்ப்பு சந்தர்ப்பம் உத்தேச புதிய வேலைகள் | 70 லட்சம் | ஒரு கோடி | ஒரு கோடிய 45 லட்சம் | ஒரு கோடிய 10 லட்சம் |
| ஐந்தாண்டு திட்டங்கள் முடிவில் வேலை இல்லாதோர் | 53 லட்சம் | 71 லட்சம் | 96 லட்சம் | ஒரு கோடிய 6 லட்சம் |

## அனுபந்தம் VII

1921—1974 இந்தியாவில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள்

**Strike Struggles in India (1921-1974)**

| *Year* வருடம் | *Strikes & Lockouts* வேலை நிறுத்தம் & கதவடைப்பு | *Number of workers participated/affected* ஈடுபட்ட தொழிலாளர் எண்ணிக்கை | *No of mandays lost* இழந்த மனித நாட்கள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1921 | 306 | 6,00,351 | 69,84,426 |
| 1922 | 278 | 4,33,434 | 39,72,727 |
| 1923 | 213 | 3,01,044 | 50,51,704 |
| 1924 | 133 | 3,12,462 | 87,30,918 |
| 1925 | 134 | 2,70,423 | 1,25,78,129 |
| 1926 | 128 | 1,86,811 | 10,97,478 |
| 1927 | 129 | 1,31,655 | 20,19,970 |
| 1928 | 203 | 5,06,851 | 3,16,47,404 |
| 1929 | 141 | 5,32,016 | 1,21,65,691 |
| 1930 | 148 | 1,96,301 | 22,61,731 |
| 1931 | 166 | 2,03,008 | 24,08,123 |
| 1932 | 118 | 1,28,099 | 19,22,437 |
| 1933 | 146 | 1,64,938 | 21,68,961 |
| 1934 | 159 | 2,20,808 | 47,75,559 |
| 1935 | 145 | 1,14,217 | 9,73,457 |
| 1936 | 157 | 1,69,029 | 23,58,062 |
| 1937 | 379 | 6,47,801 | 89,82,000 |
| 1938 | 399 | 4,01,075 | 91,98,708 |
| 1939 | 406 | 4,09,189 | 49,92,795 |
| 1940 | 322 | 4,52,529 | 75,77,281 |
| 1941 | 359 | 2,91,054 | 33,30,503 |
| 1942 | 694 | 7,72,653 | 57,79,965 |
| 1943 | 716 | 5,25,088 | 23,42,287 |
| 1944 | 658 | 5,50,515 | 34,47,306 |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| 1945 | 848 | 7,82,192 | 33,40,892 |
| 1946 | 1,619 | 19,61,948 | 1,27,17,762 |
| 1947 | 1,811 | 18,40,784 | 1,65,62,666 |
| 1948 | 1,259 | 10,59,120 | 78,37,173 |
| 1949 | 920 | 6,85,457 | 66,00,595 |
| 1950 | 814 | 7,19,883 | 1,28,06,704 |
| 1951 | 1,071 | 6,91,321 | 33,18,928 |
| 1952 | 963 | 8,09,000 | 33,73,000 |
| 1953 | 772 | 4,66,697 | 33,82,608 |
| 1954 | 840 | 4,77,138 | 33,72,630 |
| 1955 | 1,666 | 5,27,767 | 56,97,848 |
| 1956 | 1,203 | 7,15,130 | 69,92.040 |
| 1957 | 1,630 | 8,89,371 | 64,29,319 |
| 1958 | 1,524 | 9,28,566 | 77,97,585 |
| 1959 | 1,531 | 6,93,616 | 56,33,148 |
| 1960 | 1,583 | 9,86,268 | 65,36,517 |
| 1961 | 1,357 | 5,11,860 | 49,18,755 |
| 1962 | 1,491 | 7,05,059 | 61,20,476 |
| 1963 | 1,471 | 5,63,121 | 32,68,524 |
| 1964 | 2,151 | 10,02,955 | 77, 24,694 |
| 1965 | 1,835 | 9,91,158 | 64,69,992 |
| 1966 | 2,556 | 14,10,056 | 1,38,46,329 |
| 1967 | 2,815 | 14,90,346 | 1,71,47,951 |
| 1968 | 2,776 | 16,69,294 | 1,72,43,679 |
| 1969 | 2,627 | 18,26,866 | 1,90,48,288 |
| 1970 | 2,889 | 18,27,752 | 2,05,63,381 |
| 1971 | 2,752 | 16,15,140 | 1,65,45,636 |
| 1972 | 3,243 | 17,36,737 | 2,05, 43,916 |
| 1973 | 3,370 | 25,45,602 | 2,06,26,253 |
| *1974 | 2,140 | 20,12,428 | 2,87,80,754 |

* (1974 January to October—Provisional)

—From "Indian Labour Journal" January 1975

# குறள் பாணியில்
# ஏ. எஸ். கே.
## எழுதியவை

1. வள்ளுவரின் குறள் கற்ரோர் கற்றவர்,
வானுயர எதுகற்றும் கல்லாதவரே.

2. வாரி வழங்கிய வள்ளுவர் வாக்கனைத்தும்
மேதினியில் மக்கள் மேன்மையடையவே

3. மெய் உணர்தலரிது, மாந்தர்க்குப்
பொய் எளிதாகும்மே!

4. அறனெனப் படுவதே பகுத்தறிவாம்
அறனற்றது அஃதல்லாததே!

5. கண்ணிரண்டென்பார் தொழிற்சங்க உணர்வுடையோர்
புண்ணிரண்டு அஃதில்லாதவர்

6. ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ தொழிற்சங்கத்திற்கு

7. தன்னெஞ் சறிந்தும் அறியாச்சுரண்டல்
எரிமுன்னர் வைத்தூறு போலக்கெடும்

8. பீதியால் ஏற்படும் பிசாசு பயங்கரம்
நீதியால் எதையும் வெல்லலாமே!

9. கற்பனையின் கல்லறையில் கடவுளைக் கண்டவர்
''கண்டேன்!'' ''கண்டேன்'' எனக்கரைவர்

10. மனோநிலை மட்டுமே மாண்பிற்குறியது
மற்றெல்லாம் மண்ணோடு மண்ணாகும்மே!

11. ஊதியம்பெற்று உயிர்வாழும் உழைப்பாளர்
விடுதலை பெற்று புரவலராவர்

12. ஊமைக்கண்ட கனவைக் கேட்டாருண்டோ?
சென்றவர் வந்து சொன்னதுண்டோ?

# கம்யூனிஸ்டு தத்துவத்தின் அடிப்படைகள்

"கம்யூனிஸம் என்றால் என்ன?
என்ற நூல் படித்ததும், அடுத்தாற் போல்
படிக்க வேண்டிய அரிய நூல்
எல்லோரும் வாங்கிப் படிக்க
வேண்டிய நூல்

ஏ. எஸ். கே.

எழுதிய

# கம்யூனிஸம் என்றல் என்ன?

இரண்டாம் பதிப்பு] [விலை ரூ. 3

"The book, "What is Communism?" is a catechism on the Communist Party of the Soviet Union and its New Theory of Peaceful Transition to Socialism. The high brow Dialectical Materialism of the Theorists has been avoided and the entire argument in simple style is arranged to suit the context of today's Political climate in India......"

—The Mail, Madras.

"தொழிலாளி வர்க்கத்தின் பரிணும வளர்ச்சி பற்றிய சரித்திரக் குறிப்புகள், மூன்று அகிலங்களைப் பற்றிய குறிப்புகள், ரஷ்யப் புரட்சி, மக்கள் ஜனநாயகம், மாஸ்கோ அறிக்கை, தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஆகியவை விரிவாக விளக்கப்பட்டிருப்பதுடன், பிரதேச சூழ்நிலையையொட்டி ஆங்காங்கே திருக்குறள் போன்ற உவமான உபமேயங்களையும் சேர்த்திருப்பது நூலை படிப்பதற்கு உற்சாகம் கொடுக்கிறது."

—"சாந்தி" தூத்துக்குடி.

"சும்மா மேடை மினுக்காக மார்க்ஸ் என்றும், ஏங்கெல்ஸ் என்றும், லெனின் என்றும் பேசுகின்ற பலரை நமக்குத் தெரியும். ஆனல் இந்த முப்பெருந் தலைவர்களின் சித்தாந்தங்கள் கம்யூனிசக் கருத்துப் புரட்சி உலகமெல்லாம் பரவ எப்படி வழிவகுத்தது என்பதை இது வரை யாரும் கூறியதில்லை. இப்போது ஏ. எஸ். கே. கூறுகிறர்......புதிய சமுதாயம் அமைய விரும்பும் அனை

வரும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய நூல். இது கம்யூனிசக் கருத்துக்களை ஏற்காதவர்கள்கூட படித்தறிய வேண்டிய அரிய விஷயங்கள் பல உள்ளது .....

—"விடுதலை" சென்னை.

கம்யூனிச கோட்பாடுகளைப் பற்றிய முழு வடிவத்தை யும் மொத்த வடிவத்தில் பிழிந்து அளிக்கிறார் இதன் ஆசிரியர்...... இந்நூல் கம்யூனிசத்தை அறிய விரும்பு வோருக்குக் கற்கண்டொத்த நூலாகும்.

—"மூல்லைச்சரம்" சென்னை.

"......எந்தெந்தக் கோணத்திலிருந்து கருத்துகள் தோன்றுமோ, அவற்றையெல்லாம் கேள்விகளாகப் போட்டு, அவற்றுக்கு விடை ரூபத்தில் உயர்ந்த தத்து வங்களை எளிதில் புரியவைத்திருப்பது இந்நூலாசிரியர் தோழர் ஏ. எஸ். கே யின் சிறப்பாகும்......"

—"தொழிற்சங்க செய்தி" சென்னை.

"இதுபோன்ற நூல்களை அடிக்கடி தோழர் ஏ.எஸ்.கே. அவர்கள் எழுதி வெளியிட்டு தத்துவார்த்த துறையில் இளைய சந்ததி வளர உதவுவாராக."

—"மாணவர் முழக்கம்" சென்னை.

---

விரைவில் வெளிவர இருப்பது :

# "உலக கம்யூனிஸ்டு இயக்க வரலாறு"

ஏ. எஸ். கே.

எழுதியது.

# கடவுள்...

# ...கற்பனையே

**ஏ. எஸ். கே.**

எழுதியது

**விலை ரூ. 3**

மூடப்பழக்க வழக்கங்களை மனிதன் அறவே ஒழித்தாலொழிய, புதிய சமுதாயம் மலர இயலாது.

விஞ்ஞானமும், பகுத்தறிவும், கடவுள் என்றதோர் பொருள் இல்லை என்பதனை இந்த நூல் தெளிவுபடுத்துகிறது. எல்லோரும் வாங்கி வாசிக்க வேண்டிய நூல்.




# தங்கம்மா

ஏ. எஸ். கே.

எழுதிய சிறந்ததோர்

## நாவல்

விலை ரூ. 10

சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர்

**திரு. நெ. து. சுந்தரவடிவேலு**

அவர்கள் தலைமையில்

பிரபல எழுத்தாளர்

**திரு. டி. ஜெயகாந்தன்**

அவர்களால் வெளியிடப்பட்டது.

எல்லாரும் போற்றிப் புகழும் நாவல்!
முற்போக்குக் கருத்துக்களை விரும்பும்
அனைவருமே படிக்கவேண்டிய நாவல்.

கிடைக்குமிடம் :

மேனேஜர்,
பகத் ஹவுஸ் பப்ளிகேஷன்ஸ்,
1/73, பிராட்வே,
சென்னை—600001.

225166
X:97D.2

# *The Great Revolution & Other Poems*

BY

**A. S. K.**

*Price Rs.* **10**

*Was released by the*

**Hon'ble Shri K. V. RAGHUNATHA REDDY**

(Union Minister for Labour)

*A Book of Patriotic*

—REVOLUTIONARY

—LITERARY POEMS

**A book everyone must read**

பகுத்தறிவின் சிகரம்

# பெரியார்

# ஈ. வெ. ரா.

ஏ. எஸ். கே.

எழுதியது

பெரியார் ஈ. வெ. ரா.வின் வாழ்க்கைக் குறிப்புகளுடன், பெரியார் நடத்திவந்த பொருள் முதல்வாதப் பிரச்சாரம், மூடபழக்க வழக்கங்களை எதிர்த்துப் போராடியது, பகுத்தறிவின் சிகரமாக விளங்குவது என்பன போன்றவற்றை படம் பிடித்துக் காண்பிக்கும் அரிய நூல்.

A. S. K.

# A STUDY IN THE CO-OPERATIVE MOVEMENT IN INDIA

*Foreword by Hon'ble Shri S. K. DEY*

**253 pg.** **Price Rs. 10**

"...books on co-operation should be written by the people themselves or by their representatives in the Cooperative Movement... the author of this book is connected with it ...the sincerity and scholarship that the Author has invested in the preparation of this book, none can fail to appreciate"... Shri S. K. Dey.

## OTHER WORKS

**In The Land of Dimitrov**
**The War in West Asia—A Poem**
**ME LUD ! - A poem.**

*Available from :*

Manager,
**Bhagat House Publications**
1/73, Broadway, MADRAS-600001

# ஏ. எஸ். கே.

எழுதிய நூல்கள்

தமிழில் :

1. கம்யூனிஸம் என்றால் என்ன ?
2. கம்யூனிஸ்டு தத்துவத்தின் அடிப்படைகள்.
3. கடவுள் கற்பனையே.
4. பகுத்தறிவின் சிகரம் பெரியார் ஈ. வே. ரா.
5. தொழிற்சங்கம்
6. தங்கம்மா—நாவல்
7. உலக கம்யூனிஸ்டு இயக்க வரலாறு.
8. தொழிற்சங்கம்—முதல் பாகம்.

ஆங்கிலத்தில் :

1. **A Study in the Cooperative Movement in India.**
2. **In the Land of Dimitrov.**
3. **The Great Revolution & Other Poems.**
4. **ME LUD—A POEM.**
5. **The War in West Asia—A Poem.**

கிடைக்குமிடம் :

*Manager :*
Bhagat House Publication
1/73, Broadway,
MADRAS-600001.

*Manager :*
New Century Book House
6/30, Anna Salai,
MADRAS-600002.